Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

(C/704)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 24 சனிக்கிழமை (07.05.2011) பக்கங்கள் 12 ஓசை – 220

## யாழ். நகரில் சுகாதாரம் பேணல்; மாநகரசபை அதிகாரிகள் தீவிரம்

### முறைதவறுவோர்மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குள் அடங்குகின்ற உணவகங்கள், வெதுப்பகங்கள், உணவு விடுதி, தங்குமிடவிடுதி ஆகியவற்றின் சுகாதாரம் தொடர்பாக தொடர்ச்சியாகப் பரிசோதிக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபையின் பிரதமபொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் கடந்த 2 நாட்களாக மாநகர சபை எல்லைக்குட்பட்ட மேற்கூறப்பட்ட இடங்களில் திடீர் பரிசோதனை நடத்தப்பட்டதில் காலாவதியானதும் பழுதடைந்த நிலையிலும் காணப்பட்ட பெருமளவான உணவுப்பண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன், இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட உணவுப்பண்டங்களை வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், உணவு கையாளும் நிலையங்களில் காணப்பட்ட சுகாதாரக் குறைபாடுகளை ஒருவார காலத்திற்குள் நிவர்த்தி செய்யவேண்டும் எனவும், தவறின் நீதிமன்றில்

(11ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் 'நெல்சிப்' ஆரம்பம்



யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் சேவை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 'நெல்சிப்' திட்டத்தின் கீழான வேலைகளை ஆரம்பிப்பதற்கான நிகழ்வு நேற்று

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. அறிக்கைக்கு பதில் வழங்க இலங்கை - இந்தியா கூட்டுப்பொறிமுறை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையால் ஏற்பட்டிருக்கும் இராஜதந்திர அழுத்தத்திற்கு இலங்கையும், இந்தியாவும் ஒருங்கிணைந்து செயற்படத்தக்க வகையிலான புதிய இராஜதந்திரப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

ஐ.நா. அறிக்கையின் பிரதி ஒன்று மேற்படி நோக்கத்திற்காக ஏற்கனவே இலங்கை அரசினால் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையைக் கையாள்வதற்காக இந்திய அரசும் ஏற்கனவே மூத்த இராஜதந்திரிகளைக்கொண்ட குழு ஒன்றை அமைத்திருந்தது. இக்குழு கடந்த இருவாரங்களாக மேற்படி ஐ.நா. அறிக்கையைத் தீவிரமாக ஆராய்ந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் மனிதப்புதைகுழி; எலும்புக்கூடுகள் சில மீட்பு

### விசேட பரிசோதனைக்குப் பணிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். மல்லாகம் பகுதியில் சில மனித எலும்புக் கூடுகளும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன. மல்லாகத்தில் நீதிமன்றக்கட்டடம் அமைப்பதற்காக குழிகள் தோண்டப்பட்டபோதே இவ்மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை நீதிபதி கே.அரியநாயகம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், இவ் எலும்புகளை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக எடுத்துச்செல்லுமாறு நீதிபதி பணித்துள்ளார்.

## ஒசாமாவின் மரணம் அமெரிக்காவுக்குச் சாபம்

### பின்லேடன் இறந்ததை ஒப்புக்கொள்கிறது அல்கொய்தா




ஒசாமா பின்லேடன் இறந்ததை அல் கொய்தா அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தியுள்ளதாக "சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் இணையத்தளங்களை" கண்காணிப்பதாகக் கூறப்படும் SITE புலனாய்வுக் குழு (SITE Intelligence Group) அறிவித்துள்ளது.

இணையத்தளங்கள் மூலம் அல் கொய்தா வெளியிட்ட செய்தியில், ஒசாமா பின்லேடனை புகழ்ந்துள்ளதுடன், அமெரிக்காவுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக அச்சுறுத்தியுள்ளதென அந்தச் செய்தியை மொழிபெயர்த்த SITE குழு கூறியுள்ளது.

தமது ஜிஹாத் நடவடிக்கை தொடரும் எனவும் அச்செய்தியில் அல்கொய்தா தெரிவித்துள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



# மனிதாபிமானத்தின் எல்லைவரை உலகம்; ஐ.நா. அறிக்கை பற்றி சொல்ஹேய்ம் கருத்து

(ஒஸ்லோ)

இலங்கை விடயத்தில் உலக நாடுகள் சர்வதேச மனிதாபிமான நியமங்களின் எல்லைவரை சென்றுள்ளதாக நான் கருதுகிறேன் இவ்வாறு எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா. அறிக்கை என்பது மிகவும் பலமானது என்றும், இருதரப்புமே போர்க் குற்றம் புரிந்துள்ளமையை உலகம் அறியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் வன்னியில் புலிகளின் சாம்ராஜ்ஜியம் முடிவுக்கு வந்து கொண்டிருந்தபோது படையினரிடம் சரணடைந்து தமது உயிர்களைக் காப்பற்றுவதை விட வேறு வழியில்லை எனக் கருதிய புலிகள், தாம் சரணடையவிரும்புவதாகவும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் நோர்வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹேய்மிடம் கெஞ்சியபோது, தற்போது காலம் கடந்துவிட்டது. சரணடையவிரும்பின் வெள்ளைக்கொடிகளை உயர்த்திப் பிடித்தவாறு ஒலிபெருக்கிகளை எடுத்துக்கொண்டு உரக்கக் கத்தியவாறு இராணுவத்தினர் உள்ள பிரதேசங்களை நோக்கிச் செல்லுங்கள் என தன்னிடம் பேசிய புலிகளின் தளபதிகளிடம் கூறினேன் என எரிக் சொல்ஹேய்ம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண குடாநாடு எங்கே செல்கிறது;

# இந்த ஆண்டில் இதுவரை 106 பேர் மரணம்

## யாழ்.போதனா மருத்துவமனை திடுக்கிடும் தகவல்

(குருநகர்)

கடந்த நான்கு மாத இடைவெளியில் 106 பேர் அகால மணரமடைந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் தற்கொலை செய்து கொண்டவர்கள் மட்டும் 45 பேர் எனவும், நீரில் மூழ்கி மாண்டவர்கள் 26 பேர் எனவும், குடும்பத்தகராறு காரணமாகக் கொலையுண்டவர்கள் 18 பேர் எனவும், வீதி விபத்துக்களில் பலியானோர் 17 பேர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் இவ்வருட ஆரம்பம் முதல் இன்றுவரை அகால மரணமடைந்தவர்களில் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்துகொண்டவர்களின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகின்றது.

ஏனைய வருடங்களை விடவும 2011ஆம் ஆண்டிலேயே குடாநாட்டில் தற்கொலை செய்து கொள்வர்களின் விகிதாசாரம் அதிகரித்துக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கான காரணங்கள் மன வலிமை இன்மையும், எதிர் காலம் பற்றி நம்பிக்கை இன்மையுமே என யாழ்.போதனா வைத்தியசாலை மனோவியல் நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது.

எது எப்படியாயினும் இளைய தலைமுறையினரிடம் அதீதமாகக் காணப்படும் வகூரத் தன்மை தான் இவ்விளைவுகளின் முதற் காரணியாக அமைந்துவருவதையும் அனுமானிக்க முடிகிறது. (68)

## சிறு விளம்பரம்

### அலுவலகப் பணியாளர் படிவம் விற்பனையாகிறது

வட மாகாணப் பொதுச்சேவை அலுவலகப் பணியாளர் III ஆம் வகுப்பு பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ்.பூபாலசிங்கம் புத்தக சாலை மற்றும் குடாநாட்டின் முன்னனி புத்தக நிலையங்களில் மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் விண்ணப்பியுங்கள். சி.என்.எச்.சாள்ஸ்.

(படிவ விநியோகத்தர் (C/523)

## இலக்கிய நூல்களுக்கு விருது யாழ்.இலக்கிய வட்டம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவை வருடாவருடம் சிறுகதை, கவிதை, நாவல், காவியம், சிறுவர் இலக்கியம், ஆய்வு, சமயம், நாடகம், பல்துறை, மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) ஆகிய துறைசார்ந்த இலக்கிய நூல்களுக்கு தெரிவின் மூலம் விருது வழங்க விருக்கின்றது.

கடந்த ஆண்டில் வெளிவந்த மேற்படி துறைசார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதனால் குறிப்பிட்ட ஆண்டில் நூலினை வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் இரு பிரதிகளை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் 10.06.2011 இற்கு முன்னர், சி.சிவதாசன், செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல-58,கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். நூல்கள் இலங்கையில் பிரசுரமானதாக இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

## யாழ்.புன்னாலைக்கட்டுவனில் கொள்வனவு விற்பனை நிலையம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்துவைத்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தால் அமைக்கப்பட்ட கொள்வனவு விற்பனை சேவை நிலையம் நேற்றுக் காலை வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் வீதி புன்னாலைக் கட்டுவனில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முற்பகல் 11.05 மணிக்குத் திறந்துவைத்தார்.

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.ம.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கௌரவ விருந்தினர்களாக கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், அக்ரோ நிறுவன வடக்குக் கிழக்கு ஆலோசகர் ஏ.சற்குணநாதன், யாழ்.கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்ட சமூகவியலாளர் செ.ரமேஸ் மற்றும் பிரதேச விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த கொள்வனவு விற்பனை நிலையம் திறக்கப்பட்டமையானது விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை நியாய விலைக்குச் சந்தைப்படுத்தவும், விவசாய உள்ளீடுகளை வாங்கவும் பெரும் வசதியாக அமைந்துள்ளது. (கா)

## மரியாயின் சேனை நாளை பவள விழா

(குருநகர்)

யாழ்.மறைமாவட்ட மரியாயின் சேனை பக்திச் சபையின் 175 ஆவது ஆண்டு பவளவிழா நாளை முற்பகல் 6 மணிக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமை யில் நடைபெறும்.

முன்பாக காலை 8.30 மணிக்கு யாழ்.பிரதான வீதி மறைக்கல்வி நிலையத்தில் இருந்து மரியாயின் சேனையினரின் பவனி பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தை நோக்கி இடம்பெறும்.

கல்லூரி மண்டபத்தை பவனி சென்றடைந்து முற்பகல் 10 மணிக்கு நன்றித்திருப்பலி யைத் தொடர்ந்து பவளவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகும். பவள விழா மலர் வெளியீடு, மரியாயின் சேனை அங்கத்தவர்கள் வழங்கும் கலை நிகழ்வில் நடனம், நாடகம், பாடல்கள் என்பன நடைபெறும். (68)

## ஆலயங்களின் பதிவு பூநகரியில் ஏற்பாடு

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இதுவரை பதிவுசெய்யப்படாத சைவ ஆலயங்களையும், ஆலயங்களினூடாக நடத்தப்படும் அறநெறிப்பாடசாலைகளையும் பதிவுசெய்து கொள்ளுமாறு பூநகரி பிரதேச செயலக கலாசார அலுவலர் அறிவித்துள்ளார். கடந்த யுத்த அனர்த்தத்தினால் முற்றாகவோ பகுதியாகவோ சேதமடைந்த ஆலயங்களைப் பதிவுசெய்வதில் ஆலய பரிபாலன சபையினர் அக்கறைகொள்ளாது இருப்பதால் ஆலயங்களுக்கென அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகள் இழக்கவேண்டியநிலை காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(112)

## 89ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் இம்முறை தேசிய மட்டத்தில் போட்டிகள்

### இலங்கை தேசியக் கூட்டுறவுச் சபை ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)

சர்வதேச கூட்டுறவு தின விழாவினை இம்முறை தேசிய ரீதியில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

89ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவினையொட்டி இம்முறை மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் கூட்டுறவாளர்களிடையே போட்டிகளை இலங்கைத் தேசியக் கூட்டுறவுச் சபை ஒழுங்குகளை மேற்கொண்டு மாவட்ட கூட்டுறவு சபைகள் ஊடாக மாவட்டப் போட்டிகளை நடத்தி மாகாண கூட்டுறவு நிறுவனங்கள் ஊடாக மாகாண மட்டத்திலும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இம்முறை கூட்டுறவாளர்களிடையே உள்ளக அரங்கப் போட்டிகளைப் பாடசாலை மட்டத்திலும், கூட்டுறவு அங்கத்தவர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், கூட்டுறவுப் பணிப்பாளர்கள், கூட்டுறவுத் திணைக்களப் பணியாளர்களுக்கு மைதானப் போட்டிகளையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல் சுற்றுநிருபங்கள், மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் ஊடாக சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட மைதானப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திலும், பாடசாலை மட்டப்போட்டிகள் யாழ். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்திலும் இடம்பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட டுள்ளன. பாடசாலை மட்டத்தில், கவிதை, கட்டுரை, பொதுஅறிவு, விவாத மேடை ஆகிய போட்டிகளும், கூட்டுறவாளர்களுக்கு ஓட்டப்போட்டி, வேகநடை, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், ஏனைய மைதான நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (27)

## பன்றி இறைச்சி கடத்தியவர் கைது

(சாவகச்சேரி)

சட்டவிரோதமாகப் பன்றி இறைச்சியை பூநகரிப் பிரதேசத்திலிருந்து கொண்டுவந்த இரண்டு நபர்களைச் சங்குப்பிட்டியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்தனர்.

பொலிஸார் குறித்த நபர்களை நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது, வழக்கை விசாரித்த நீதிபதி இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இருவருக்கும் தலா மூவாயிரம் அபராதம் விதித்ததுடன், செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு சான்றுப் பொருளான பன்றி இறைச்சியை பறிமுதல் செய்து அழிக்குமாறும் நீதிமன்றுக்கு உத்தரவிட்டார்.(11)

## இலக்கிய வட்ட நூல் வெளியீடு

(குருநகர்)

யாழ்.இலக்கியவட்ட நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதின மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியன்) தலைமையில் சிவயோகமதி கந்தவனம் எழுதிய இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை என்னும கட்டுரை நூல் வெளியிட்டு வைக்கப்படும். ஆசியுரையை திருஞானசம்பந்த ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியர் சுவாமிகள் வழங்குவார். செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுகன் வெளியீட்டு உரையையும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மதிப்பீட்டுரையும் நிகழ்த்துவார். (68)

## சர்வதேச அன்னையர் தினம்

(குருநகர்)

யாழ்.சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் "தெய்வத்தின் சாயல் அன்னை அவள் மகத்துவத்தை உணர்ந்து கொள்வோம்" என்னும் மகுட வாக்கியத்தை முன்வைத்து நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியில் இருந்து பிற்பகல் 2.30 மணிவரை யாழ். றிம்மர் மண்டபத்தில் சர்வதேச அன்னையர் தினத்தை முன்னெடுககவுள்ளது. பணியக இயக்குநர் அருட்தந்தை பிரவீன் மகேசன் அடிகள் (அ.ம.தி) ஆசியுரை வழங்குவார். யா.மயிலிட்டி, றோ.க. த.க. பாடசாலை அதிபர் திருமதி அருளையர் லீலாவதி மற்றும் சுண்டுக்குளி தெற்கு ஜே/75 கிராம சேவை உத்தியோகத்தர் செல்வி எஸ்.பிறசில்லா ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவர். (68)

## விரைவில் ஆரம்பம்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசசபையினூடாக முன்னெடுக்கப்படும் நெல்சிப் வேலைத்திட்டம் வெகு விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கரவெட்டிப் பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தில் துன்னாலை மத்தி குநலன் வீதி, துன்னாலை செம்பாட்டு வீதி ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (18)

பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந் தாலும், அது பற்றிப் பேசக்கூடாது. அப்படிச் செய்வதனால் நீங்கள் அவனுக்குக் கேடு செய்வதுடன், உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்கிறீர்கள். விவேகானந்தா

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதர்ன வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## தட்டிக் கேட்டால் அச்சுறுத்தலா?

யாழ். குடாநாட்டிலுள்ள பல பிரதேசங்களிலும் காணப்படுகின்ற குறைபாடுகள், தேவைகள் தொடர்பில் தினமும் ஊடகங்களில் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

போக்குவரத்தில் காணப்படும் இடர்ப்பாடுகள், மின்சாரமின்மை, வைத்தியசாலைகளில் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள், அரச செயலகங்களில் அதிகாரிகள் காட்டிவரும் அசமந்தப் போக்குகள், அதிகாரிகள் இன்றி இயங்கும் அரச அலுவலகங்கள் என்பன சம்பந்தமாகச் செய்திகள் தினமும் வந்து கொண்டே இருக்கின்றன.

அரச அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வந்தாலும், பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறும் பாரிய கடப்பாடும் உண்டு என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் பாரிய பொறுப்பு அரச அதிகாரிகளுக்கு உண்டு. அந்தப் பொறுப்பிலிருந்து எவரும் தப்பிவிட முடியாது. மக்களுடைய தேவைகளை இனங்கண்டு, அவற்றுக்குரிய தீர்வுகளை அரச அதிகாரிகளே காணவேண்டும்.

மக்களிடம் இருந்து பெறப்படுகின்ற வரிப்பணத்திலேயே தங்களுக்குரிய வேதனத்தைப் பெற்று வருகிறோம் என்பதை இவர்கள் மறந்துவிடக்கூடாது.

யுத்தம் முடிவுக்கு வந்து சமாதானம் ஏற்பட்டு, நாடு அபிவிருத்திப் பாதையில் செல்ல முற்பட்டுள்ள வேளையில் எதிலும் அரச அதிகாரிகள் தமது அசமந்தப் போக்கைக் காட்ட முனையக்கூடாது.

இவர்கள் தமது அசமந்தப் போக்கினை எப்போது காட்ட முனைகிறார்களோ அப்போது தான் இவர்களுக்குப் பலதரப்பினராலும் நெருக்குதல்கள் ஏற்பட வாய்ப்புண்டாகிறது.

அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்றுகூடி பிரதேச ஒருங்கிணைப்புக்குக்குழுக் கூட்டங்களில் எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அரச அதிகாரிகள் தவறும் போதுதான் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டாகிறது.

இந்த இடத்தில் அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட அரச அதிகாரிகளுடனான சந்திப்பொன்றில் அமைச்சர் ஒருவர் அரச ஊழியர்கள் தாம் பணிபுரிகின்ற சமூகத்தின் பிரதிநிதிகளை மட்டுமல்லாது, தமது அலுவலகக் கடமையுடன் சமூகக் கடமைகளையும், முன்நிறுத்திப் பணிபுரிய வேண்டுமென விடுத்த வேண்டுகோளை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

யுத்தப் பாதிப்புக்குள்ளாகிச் சிதைவடைந்து போயுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைக் கட்டியெழுப்புவதில் அரசும், அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முனைப்புடன் செயற்பட்டு வரும் வேளையில்,அரச அதிகாரிகள் தமது ஏனோதானோ என்ற மனப்பான்மையைக் காட்டி வந்தால் அவர்களுடன் அவர்களுக்கு ஏற்ற தோரணையில் நடந்து கொள்வதில் தவறேதும் இல்லை.

இவ்வாறு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் ஒருவரிடம் முறைப்பாடு செய்திருக்கிறார் என்றால் அவரது மக்கள் சேவையின் அளவுகோல் எத்தகையது என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

எதனையும் தட்டிக்கேட்க வேண்டிய நேரத்தில் தட்டிக்கேட்க வேண்டும்.அப்படித் தட்டிக்கேட்கத் தவறவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம் ஆகிவிடுவார் போலத் தான் முடியும்.

இதனை அமைச்சர்கள் மீதும் அரசியல் வாதிகள் மீதும் குற்றம் சுமத்தும் அரசியல் வாதிகள் செல்லாக்காசாக மதிக்கப்படுவர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

-ஆசிரியர்-

# போதியளவு வைத்தியர்கள் இல்லாமையால் சிகிச்சை பெறுவதற்கு தவிக்கும் நோயாளர்கள்

## பூநகரி பொது வைத்தியசாலையின் இன்றைய நிலை

(பூநகரி)

பூநகரி அரச பொது வைத்தியசாலையில் போதியளவு வைத்தியர்கள் உள்ளிட்ட ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாமல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றே சிகிச்சை பெற வேண்டிய நிலை காணப்படுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆளணிப் பற்றாக்குறையினால் மருந்து எடுக்கச் செல்லும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்து நின்றும் அவற்றைப் பெறமுடியாது ஏமாற்றத்துடன் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையில் கடந்த 6 மாதத்திற்கு மேலாக சேவையாற்றிய சகோதர மொழி வைத்தியர் கடந்த வாரத்திற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து அந்த இடத்திற்குப் புதிய வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாததனாலேயே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உருத்திரபுரம் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் இவ் வைத்தியசாலைக்குத் தற்காலிகமாக ஒரு வாரத்தில் 3 நாட்கள் மட்டும் காலை மாலை இரு வேளைகளில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க நியமிக்கப்பட்டார்.

ஆனால், 20 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் வைத்திய வசதிகளைப் பெறவேண்டிய நிலையில் ஒரு வைத்தியர் மட்டும் சிகிச்சை வழங்குவது கடினமான விடயமாகும்.

இதேவேளை இவ் வைத்தியசாலையின் குறைபாடுகளைப் பற்றிப் பலதரப்பினரிடமும் எடுத்துக்கூறியும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இவ்வைத்தியசாலையில் 3 இற்கும் மேற்பட்ட வைத்தியர்களும் 15 க்கு மேற்பட்ட பணியா ளர்களும் கடமையாற்றிய நிலையில் தற்போது நிலவும் இந்த ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர் பாக நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (112)

## இரண்டு கட்டடங்கள் இன்று திறந்து வைப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறைப் பிரதேசத்திற்கு இரு அமைச்சர்கள் இன்று சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டு அங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைக்கவுள்ளனர். இதில் உள்ளூராட்சி அமைச்சர் செனவிரட்ன, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோரே இக் கட்டடங்களைத் திறந்து வைக்கவுள்ளனர்.

இதில் பருத்தித்துறைப் பிரதேச செயலருக்காகப் புதிதாகக் கட்டப்பட்ட விடுதியும் மற்றும் கிராம மூர்த்தி சுகாதார உத்தியோகத்தர்களுக்காக கற்கோவளத்தில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகமுமே திறந்து வைக்கப்படவுள்ளன. (100)

# விடுதலை கிடைத்தும் பிணைப்பணம் இல்லை மீண்டும் சிறை செல்லும் புலிச் சந்தேக நபர்கள்

(பருத்தித்துறை)

புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த ஏழு வருடமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள போதும் பிணைப் பணம் வழங்க பணம் இல்லாத நிலையில் மீண்டு சிறைச்சாலைக்குச் சென்ற சம்பவம் மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்றுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

திருகோணமலை மாவட்டத்தின் கிளிவெட்டி பிரதேசத்தின் பாரதிபுரத்தை சேர்ந்த கந்தசாமி கரண் (31வயது) என்பவர் வந்தாறுமுலையில் திருமணம் முடித்துள்ளார். இவர் கடந்த 2004ஆம் ஆண்டு மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்த போது படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தீங்கு விளைவிக்கும் ஆயுதச் சட்டத்தின் கீழும், வெடிபொருட்கள் சட்டத்தின் கீழும், சுடுகலன் சட்டத்தின் கீழும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சந்தேக நபர் சார்பில் பிரபல சட்டத்தரணி செல்வி கிருத்திகா முத்துராஜா ஆஜராகியிருந்ததுடன் அரச தரப்பின் சார்பில் சட்டத்தரணி ஐங்கரன் ஆஜராகியிருந்தார்.

இந்த நிலையில் இவரது வழக்கு நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது கடந்த 7 வருடமாக தடுத்துவைக் கப்பட்டிருந்த குறித்த நபர் 5000ரூபா காசுப்பிணையிலும் 150,000 ரூபா இரண்டு சரீரப்பிணையிலும் செல்ல மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி சிவபாதசுந்தரம் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபரின் குடும்பத்தினரில் பலர் கடந்த கால யுத்தத்தின் போது உயிரிழந்துள்ள நிலையில் குறித்த சந்தேக நபரின் மனைவியும் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டு சென்றுள்ள நிலையில் குறித்த நபர் பிணையில் 5000ரூபா செலுத்த முடியாத நிலையில் மீண்டும் சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

அத்துடன் அவரை பிணையில் எடுத்துச் செல்லவும் யாரும் அற்ற நிலையில் உள்ளார். இதுபோன்று பலரின் நிலை கிழக்கு மாகாணத்தில் உள்ளதாகவும் இவர்கள் தொடர்பில் உதவுவதற்கு உதவும் அமைப்புக்கள் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அலங்கார உற்சவம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி, கண்டாவளை அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகித் தினமும் விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (110)

# துரித பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்ட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


வடமாகாண ஆளுநர் ஜே.ஏ.சந்திரசிறி அவர்களின் வழிகாட்டலிற்கமைவாகவும், உள்ளூராட்சி மன்றங்களின் வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் வடமாகாண துரித பொருளாதார அபிவிருத்திக்கான தேடல் ஆரம்ப அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முற்பகல் யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடமாகாணத்தில் நடுத்தர பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான ஆரம்பப் பணிகள் குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டது. அத்துடன் மத்திய மற்றும் மாகாண சபை அரசுகள் பொருளாதாரத் திட்டங்களில் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல். மூன்று மாதங்கள் இதற்கெனத் தொடர் நடவடிக் கைகளை மேற்கொள்ளல். அத்துடன், மாவட்ட அடிப்படை யில் முதலீட்டு வாய்ப்புக்களை இனங்கண்டு புத்தக மொன்றை வெளியிடல் என்பனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் திணைக்களத் தலைவர்களும் வடமாகாண சபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை வடமாகாண சபையும் நியூ கிளியஸ் பவுண்டேசனும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது. (17)

# நாட்டில் அமைதியும் அபிவிருத்தியும் ஏற்படும்போது அவசரகாலச் சட்டம் இல்லாமற் போய்விடும்

## அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உதயன் எம்.பி உரை



இந்தச் சபையிலே, அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் விவகாரம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் நான் என்னுடைய உரையில் சில முக்கிய விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன். முதலில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக எமது கட்சியாகிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். எமது கட்சி அவசரகாலச் சட்டத்தை மனப்பூர்வமாக என்றைக்கும் விரும்பவேயில்லை.

நாட்டில் நிலவிய இயல்பற்ற நிலைமையின் காரணமாக அவசரகாலச் சட்டத்தை நாம் ஆதரிக்க வேண்டிய நிலை இருந்தது. இப்போது நிலைமைகள் மாறிவிட்டன. இப்பொழுது யுத்தம் முடிந்து, அமைதிச் சூழல் ஒன்று உருவாகியுள்ளது. இந்த அமைதிச் சூழலில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு, நாம் ஒரு காலவரையறையை நிர்ணயிக்க வேண்டும். என்று தெரிவித்திருக்கிறோம். இதேவேளை - இதைவிட - அவரசகாலச் சட்டத்தை நீக்குவதைப் பற்றியும் தமிழ்மக்களின் பிரச்சினைகளைப் பற்றியும் வேறு தனிப்பட்ட சந்திப்புக்களின் போதும் ஜனாதிபதியிடமும் வேறு அரசியற் பிரமுகர்களிடமும் வலியுறுத்தி வருகிறோம். இந்த வகையில் விரைவில் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாமல், நீக்கப்படும் ஒரு நிலை வரும் என நம்புகிறோம்.

கடந்த காலத்தில் நாம் வலியுறுத்திய பல விடயங்கள் இன்று நடைமுறைச் சாத்தியமாய் இருக்கின்றன வலி - வடக்கில் மீள்குடியேற்றம் நடக்காது என்று சிலர் கூறிவந்த நிலையை மாற்றி அங்கே மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதைப்போல் மேலும் எஞ்சியிருக்கும் பிரதேசங்களிலும் மீள் குடியேற்றம் நடைபெறவேண்டும் என்று நாங்கள் மக்களுக்கு உறுதியளித்துள்ளளோம்.

என்ன நடக்குமோ அதைத்தான் சொல்கிறோம். நடைமுறைக்குச் சாத்தியமானதைத்தான் சொல்கிறோம். நடக்க முடியாததை - எங்களால் செய்ய முடியாத எதையும் நாங்கள் சொல்லி அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களை அரசியல் ரீதியாக பலவீனமாக்கப்பட்ட மக்களை இனியும் யாரும் ஏமாற்ற அனுமதிக்க முடியாது. முப்பது ஆண்டுகளாக இழந்து போன வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. பெரும் போரினால் அழிவடைந்த பிரதேசங்களை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. போரின் விளைவாகச் சிதைந்திருக்கும் சமூகத்தை மீள் நிலைப்படுத்த வேண்டியுள்ளது. எதிர்காலத்தின் முன்னே கேள்விக்குறிகளாக்கப்பட்ட மக்கள் இப்பொழுது நம்பிக்கையான ஒரு காலத்துக்கு அழைத்து வரப்பட்டிருக்கின்றனர். யுத்தம் முடிந்து அமைதி திரும்பியிருப்பது என்பது சாதாரணமான விடயமல்ல, மிகப் பெறுமதியான மனித உயிர்கள் இன்று பாதுகாக்கப்படுகின்றன.

கடந்த காலத்தை விடவும் இப்போது இனங்களுக்கிடையிலான உறவு நிலை மேம்பட்டு வருகின்றது. இது ஒவ்வொருவரும் தமது கசப்பான கடந்த காலத்தைக் கடப்பதற்கான சூழலாகும். இதேவேளை இன்னும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை நாம் தீர்க்க வேண்டும். நீண்டகாலமாக அரசியற் கைதிகளாக இருக்கின்ற பல ஆயிரக்கணக்கானவர்களின் விடுதலையை நாம் விரைவு படுத்த முயற்சிக்க வேண்டும். புலி உறுப்பினர்களாக முன்னர் செயற்பட்ட ஆயிரக்கணக்கானவர்களை அரசாங்கம் புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைத்துள்ளது. அவர்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுக்கான உதவிகளை அனைவரும் செய்ய வேண்டும்.

எவருடைய துயரத்தையும் நாங்கள் விரும்பவில்லை. இந்த நாட்டிலே அமைதி வேண்டும். நிம்மதியான வாழ்க்கைச் சூழலொன்று உருவாக்கப்படவேண்டும் என்பதற்காகவே நாம் தொடர்ந்து உழைத்து வருகிறோம். ஆனால், யாழ்ப்பாணத்திலும் புலம் பெயர் நாடுகளில் உள்ள சில தமிழ் ஊடகங்கள் இதை மறைத்துப் பொய்களையும் புனைவுகளையும் உருவாக்கி வருகின்றன. எந்தத் தவறும் நீடித்திருக்க முடியாது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பார்கள். சில ஊடகங்கள் புனையும் கதைகள் சில காலத்துக்குத்தான் எடுபடும். அதற்குப் பிறகு அவை எடுபடாது. அதுவரை அலங்காரப் பொய் மக்களை மயக்கிக் கொண்டிருக்கும். ஆபத்திலும் அந்தரத்திலும் மக்களுக்கு உதவாமல், வெறுமனே வாய்ப்பேச்சுப் பேசிக் கொண்டிருக்கும் அரசியற் தலைமைகளை மக்கள் தொடர்ந்து அனுமதிக்க மாட்டார்கள். மக்களின் பிரச்சினைகளை யார் தீர்க்கின்றார்களோ மக்களுடைய மன உணர்வுகளுக்கும் அவர்களுடைய தேவைகளுக்கும் யார் முன்னுரிமை அளிக்கிறார்களோ அவர்களையே மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

இந்த உண்மையின் வழித்தடத்திலேயே நாங்கள் பயணித்து வருகிறோம். எனவேதான் நாங்கள் மக்களைப் பொய் மயக்கத்தில் வைத்திருக்காமல், உண்மைக்கு நெருக்கமாக அழைத்து வருகிறோம். எது கிடைக்கக் கூடியது, எது நடக்கக் கூடியது என்ற தெளிவு ஓர் அரசியற் தலைமைக்கு இருக்க வேண்டும்.

நாம் அந்தத் தெளிவோடு, மக்களை வழிநடத்த விரும்புகிறோம். அப்படி உண்மையோடு மக்களை நாம் இணைத்தோம் என்றால், அவசரகாலச் சட்டம் என்ற ஒன்றே தேவையற்று விடும்.

மக்கள் கலவரமடையாமல், அமைதியாக - நிம்மதியாக - சகல உரிமைகளையும் பெற்று வாழக்கூடிய சூழல் ஒன்றை நிச்சயம் நம்மால் உருவாக்க முடியும். இதற்கு முன்னர் மக்களுக்கிருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் காணி மற்றும் வீடு தொடர்பான பிரச்சினைகளையும் முதலில் நாங்கள் தீர்கக வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்துக்கு வெளியிலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு காணியும் வீடும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்தப்பிரச்சினைக்கு நாம் அவசரமாக ஒரு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும்வரை இந்த மக்கள் அகதியாகவும் இரவல் வீடுகளிலும் வாழ முடியாது.

அரசாங்கம் அளப்பரிய சாதனைகளைச் செய்து வருகிறது. மக்களுக்கு நிறைய உதவிகளைச் செய்து வருகிறது. யுத்தத்தின் பிடியிலிருந்து மீண்ட ஒரு நாடு - ஒரே நாளில் அல்லது ஒரு சில ஆண்டுகளில் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடும் என்று கற்பனை செய்ய முடியாது. அதைவிட சர்வதேச சமூகத்தின் நலன்களின் விளைவான போட்டிகள் - அழுத்தங்களுக்கு மத்தியில் தன்னை நிதானப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையிலும் இன்று இலங்கை இருக்கிறது.

இந்த நாட்டிலே அமைதியும், அபிவிருத்தியும் ஈடேறும் போது, அவசரகாலச்சட்டம் பற்றிய பேச்சே இல்லாமற் போய்விடும். அந்த நாளுக்காக நாங்கள் இன்றே - இந்தக் கணத்திலிருந்தே உழைப்போம் என்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

# உடுவில் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்வி கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள் உடுவில் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.

இப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் முறையே வருமாறு!

எழுத்தாக்கம்

பிரிவு I

மகேந்திரன் திவ்ஜா (யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை), பாக்கியநாதன் சானுஜா (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜெயக்குமார் வைஸ்ணவி (யா/உடுவில் மகளிர் கல்லூரி),

வாசிப்பு

தேவகரன் துளசிகா (யா/இணுவில் மத்திய கல்லூரி), ரவிதாஸ் பவித்தனன் (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை), கைலாசபதி அனிஸ்ரன் (யா/ஏழாலை தெற்கு அ.மி.த க.பா)

பேச்சு

மகேஸ்வரன் ரம்மியா (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), அலன்கியூமர் பிரியங்கா (யா/உடுவில் மகளிர் கல்லூரி) சசிதரன் ஆதித்தன் (யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை) சுதாகரன் டாரனி (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை).

பாவோதல

சிவகுமாரன் சிவபரணிக்கா(யா/ஏழாலை ம.வி), இன்பராசா ஜென்சிகா (யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), யூட்ஞானசீலன் விபர்சனா (யா/கந்தரோடை கமிழ்க் கந்தையா வித்தியாசாலை).

கதை கூறல்

சுரேந்திரன் சுகிர் (யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா), அபிசன் (யா/சுன்னாகம் திருஞான சப்பந்தர் வித்தியாசாலை), பூவலிங்கம் நிலக்சன் (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை).

இசையும் அசைவும்

உதயசீலன் சுதர்சனா, பாஸ்கரன் நிசாளினி (யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை), இராசகுமார் தனுஜா (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை)

கட்டுரை

பிரிவு II

குகேந்திரராசா கஸ்தூரி (யா/தாவடி இந்து தமிழ்க் கலவன்), சுப்பிரமணியம் ஜனனி (யா/இராமநாதன் கல்லூரி), மனோகரன் சயின்ஸ்லா (யா/உடுவில் மான்ஸ் ம.வி).

பிரிவு III

விமலச்சந்திரன் கயன்சிகா(யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்),குணரத்தினம் காருண்யா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), விமலாம்பிகைபாகன் கீர்த்தனா(யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி).

கட்டுரை/இலக்கியநயம்

பிரிவு IV

விமலாம்பிகைபாகன் திவாகரன் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) யோகலிங்கம் சூரியா(யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஆபூர்வசிங்கம் தர்சிகரூபன் (யா/இணுவில் மத்திய கல்லூரி).

பிரிவு V

லோறன்ஸ் இராஜகுமார் அனற்கேசிகா (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), பஞ்சாபிகேசன் தர்சிகா, உதயகுமார் மேனகா (யா/இணுவில் மத்திய கல்லூரி).

இலக்கணம்

பிரிவு IV

உதயரஞ்சன் தனுஷன் (யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்),கனேசமூர்த்தி மோகனஜெனனி (யா/இணுவில் இந்துக் கல்லூரி), செல்வமோகன் மதுஷன் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

இலக்கண வினாவிடை

பிரிவு V

ஆனந்தராஜா ஜெயப்பிரகாஷ் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தர்மலிங்கம் சுஜிதா (யா/இணுவில் இந்துக் கல்லூரி).

குறுநாடகம் ஆக்கம்

பிரிவு IV

சதீஸ்கந்தவராசா சன்சிகா (யா/ஏழாலை ம.வி), சண்முகநாதன் டினேஸ் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ரவீந்திரன் அன்ரோட் (யா/உடுவில் முருகமூர்த்தி).

பிரிவு V

ஜெயரத்தினம் தர்சனா (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சீலன் , யாழினி (யா/இணவில் இந்துக் கல்லூரி).

சிறுகதை ஆக்கம்

பிரிவு IV

வரதராசா சொரூபிகா (யா/இணுவில் இந்துக் கல்லூரி), இமெல்டா (யா/இராமநாதன் கல்லூரி), இலட்சுமிகாந்தன் நிலானி (யா/எழாலை ம.வி.)

பிரிவு V

கோணேஸ்வரன் ஜனார்த்தனி (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கண்ணதாசன் ரபிதா (யா/இணுவில் இந்துக் கல்லூரி).

கவிதை ஆக்கம்

பிரிவு IV

நிசாகரன் நிலக்சனா (யா/உடுவில் முருகமூர்த்தி), இராகுலதேவன் டெனா (யா/ஏழாலை சைவ மகாஜன்), மனோகரன் மதுஷா (யா/இணுவில் இந்துக் கல்லூரி).

பிரிவு V

மனோகரன் மஞ்சுகா (யா/இணுவில் இந்துக் கல்லூரி), விஜயகுமார் சுலக்ஷன் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), யூகராசா சஜீவினி (யா/இணுவில் இந்துக் கல்லூரி).

திறனாய்வு

பிரிவு V

வரதராஜா துவாரகன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி), ஜெயகாந்தன் எழிலரசி (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

# தீவக கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே சாரும்

## வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் பாராட்டு

(புங்குடுதீவு)

தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை அமைசசர் டக்ளஸ் தேவானந்தாவையே சாருமெனெ வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தெரிவித்தார்.

யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் பவள விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்தவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளங்கி வருவதுடன் தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் வித்திட்ட பெருமையும் அவரையே சாரும்.

இப்பாடசாலை பல கல்வி மான்களை மட்டுமல்ல பல்துறை சார்ந்த ஆற்றலுள்ளோரையும் வளர்த்தெடுத்துள்ளதுடன் இனி வரும் காலங்களிலும் இதனது கல்விச் சேவை சிறப்பான முறையில் தொடர வேண்டும்.

சிறந்த கல்விச் சமூகத்தின் மூலமே ஒரு சமுதாயம் நல்ல நிலை அடையும் என்பதுடன் அதற்கிணங்க ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

முன்பதாக பவள விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புங்குடுதீவு மடத்துவெளி ஆலயத்தில் வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

தொடர்ந்து பாடசாலையை சென்றடைந்த அமைச்சர் பவள விழா நினைவுக் கல்லினை திரை நீக்கம் செய்து வைத்தார்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர் நாகராசா உரையாற்றியதைத் தொடர்ந்து, பாடசாலைச் சமூகத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தியும், வாழ்த்துப் பாமாலை வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார்.

அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறப்புரையாற்றுகையில், பாடசாலைச் சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவக பாடசாலைகது மின்னிணைபபு வேலைகள் செய்துதரப்படுமெனவும் வடக்கின் வசந்தம் ஊடாக மின்சாரம் பெற்றுத்தரப்படுமெனவும் மேல்மாடி கட்டிடத்திற்கான ஜன்னல்கள் அமைதது்தரப்படுமெனவும் உறுதிமொழி வழங்கினார்.




அத்துடன் மாணவர்கள் அடுத்த பாடசாலை விடுமுறையின்போது கல்விச் சுற்றுலா மேற்கொள்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுவிஸ் பழைய மாணவர்களினால் அன்பளிப்புசெய்யப்பட்ட 12 துவிச்சக்கர வணடிகள் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கல்வித்துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர.

## திருப்பணி வேலைகள்

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத் திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. ஆலய பரிபாலனசபையின் முழுநேரமும் ஆலயப்புனரமைப்பு வேலைகளைக் கண்காணித்து வருகின்றனா.

எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம திகதி கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது. கும்பாபிஷேகத்துக்கான ஆயத்த வேலைகளில ஆலய பரிபாலன சபையினர் ஈடுபட்டுள்ளனர். (10)

## 5ஆயிரம் ரூபா அபராதம்

மந்துவில் கிழக்குப் பகுதியில் கைத்தொலைபேசியில் ஆபாசப் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்த நபர் ஒருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிபதி மா.கணேசராசா குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 5 ஆயிரம் ரூபா செலுத்துமாறும், தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (11)

## கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகள்

(புங்குடுதீவு)

கோப்பாய் அஞ்சலகத்தில் தற்பொழுது கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மின்சாரப் பட்டியல் கட்டணம் செலுத்துதல், காசுக்கட்டளைகள் வழங்கல், கொடுப்பனவு, தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள், மொபிற்றல் பட்டியல் கட்டணம் செலுத்துதல் மற்றும் விரைவு தபாற்சேவை, வாகனத் தண்டப் பணம் அறவிடல், பொதிகள் சேவை மற்றும் வழமையான தபாற் சேவைகள் என்பன நடைபெற்று வருகின்றன.

இதனால் கோப்பாய் பிரதேச மக்களின் நீண்டநாள் குறைபாடுகள் நீங்கித் தமது பிரதேசத்திலேயே செய்யக்கூடிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கின்றன. (08)

## சமய தீட்சை பெறாதவர்கள் சைவ சமயத்தவர்கள் அல்லர்

(யாழ்ப்பாணம்)

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமானை வாழ்த்தி வணங்கி அழுதுதொழுது அவரடி சேர்ந்தவர் நாவுக்கரசர். அத்தகைய எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாக விளங்குபவர் சிவபெருமான் அவரை வணங்கி வாழ்த்தித் தொழுகின்ற சைவர்கள் சமயதீட்சை பெற வேண்டும். சமய தீட்சை பெறாதோர் சைவாகளே அல்லர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற திருநாவுக்கரசர் குருபூசை நிகழ்வில் கலந்து கொண்டு தெய்வீக சொறபொழிவாற்றிய சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொக்குவில் இந்து மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து ஏற்பாடு செய்த இந்தக் குருபூசை நிகழ்வில் அவா தொடர்ந்து உரையாற்றுகையில-

மாணவர்கள் உண்மையான பக்தியுடன் இறைவனைத் தொழுது வந்தால் கல்விச் செல்வம் தானாகவே வந்து சேரும். ஒவ்வொரு மாணவனும் தாய், தந்தை, குருவை மதித்து நடக்க வேண்டும். பொய் சொல்லாமல் வாழப் பழக வேண்டும்.

நெற்றியில் திருநீறு அணி யத் தயக்கம் காட்டக் கூடாது. நன்றாக நெற்றி நிறையத் திருநீறு அணிய வேண்டும். நாவுக்கரசர் குருபூசையைக் கொண்டாடினால் மட்டும் போதாது.

நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய பாதையிலே நாமும் நமது வாழ்க்கை வண்டியை ஓடவிட வேண்டும். அப்போதுதான் உண்மைச் சைவர்களாக வாழ முடியும் என்றார்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(07.05.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 24 ஆம் நாள்.

நட்சத்திரம் : மிருகசீரிடம் மு.ப. 7.59 வரை,

திதி: சதுர்த்தி பி.ப. 2.50 வரை.

சதுர்த்தி விரதம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– கழன வேலை, மனசஞ்சலம், கவலை, வீண் பயம்.

ரிஷபம்:– பணவரவு, மனமகிழ்ச்சி, நண்பர் உதவி, நிம்மதி.

மிதுனம் :– உட்பகை, வீண் கற்பனை, பணவரவு, கவலை.

கடகம்:– மனசஞ்சலம், வீண் கவலை, நண்பர் தொல்லை, நிம்மதியின்மை.

சிம்மம்:– முயற்சி பலிதம், பொருள் இழப்பு, பணவரவு, நண்பர் உதவி.

கன்னி :– காரிய சித்தி, மனமகிழ்ச்சி, நிம்மதி, பணவரவு.

துலாம் :– அதிகசெலவு, கவலை, மனசஞ்சலம், முயற்சி தோல்வி.

விருச்சிகம்:– பணவரவு, மனமகிழ்ச்சி, நண்பர் உதவி, நிம்மதி.

தனுசு:– நல்ல சேதி, மனநிம்மதி, வீண் கற்பனை, நண்பர் தொல்லை.

மகரம்:– அதிக செலவு, நண்பர் சேர்க்கை, மனமகிழ்ச்சி, நிம்மதி.

கும்பம் :– விதண்டாவாதம், நல்ல சேதி, வேண்டாத வேலை, மனக் குழப்பம்.

மீனம்:– வீணான கவலை, பணவரவு, நண்பர் உதவி, நிம்மதி.

## புதிய துணை வேந்தருக்கு பாராட்டு விழா நடத்த ஏற்பாடு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய துணை வேந்தராக நியமனம் பெற்றுப் பதவியேற்றுள்ள பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தைப் பாராட்டி கௌரவிக்கும் விழா இம்மாத இறுதியில் சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா ஏற்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விழாக் குழுத் தலைவராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும், செயலாளராக திருக்கணித நிலைய முகாமையாளர் கா.சிவஞான சுந்தரரும், பொருளாளராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றச் செயலாளர் க.சுதாகரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இருபதுபேர் கொண்ட விழாக குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இவ்விழா தொடர்பான சிறப்பு மலர் ஒன்றும் வெளியாவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (10)

## பொதுக்கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட 98 சனசமூக நிலையங்களுக்கான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி பி.ப. 2 மணியளவில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைப் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து சனசமூக நிலைய அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கரவெட்டி சனசமூக நிலைய சமாசத் தலைவர் அறிவித்துள்ளார். (18)

## யாழ். பருத்தித்துறை வீதியின் மதகுகள் புனரமைக்கப்படுகின்றன

(அச்சுவேலி)

யாழ்-பருத்தித்துறை பிரதான வீதியின் அகலிப்புப் பணிகளின் ஒரு கட்டமாக கோப்பாய் முதல் யாழ்.நகர் வரையான வீதியின் புனரமைப்புப் பணிகளின் முதற்கட்டமாக சேதமடைந்த மதகுகள் புதிதாகப் புனரமைக்கப்பட்டு வருவதுடன், ஏனைய மதகுப் பகுதிகள் விஸ்தரிப்புச் செய்யும் நடவடிக்கைகளும் முழுவீச்சில் இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை மேற்படி மதகுகளின் புனரமைப்புக்காக பயன்படுத்தப்படும் கற்கள் மற்றும் பிற பொருட்களை வீதியில் ஒழுங்கற்ற முறையில் போட்டு விடுவதால் வீதியால் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பயணிகள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்த வண்ணமே பயணிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதி விஸ்தரிப்பிற்கே அப்புறப்படுத்தப்பட்டு வரும் மதில்களுக்குப் பதிலாக புதிதாக மீள அமைக்கப்பட வேண்டிய மதில்கள் உரிய நேரத்தில் கட்டி முடிக்கப்படுவதில்லை எனவும், இதனால் தமது குடியிருப்புக்கும், சொத்துக்களுக்குமான பாதுகாப்புக் கேள்விக்குறிக்குள்ளாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (03)

## இருளில் மூழ்கிக் கிடக்கும் குடாநாட்டு பிரதான வீதிகள்

(அச்சுவேலி)

குடாநாட்டின் பிரதான வீதிகள் பலவும் இரவு வேளைகளில் வீதி விளக்குகள் எவையுமின்றி இருளில் மூழ்கிக் காணப்படுவதனால் இரவில் பயணிக்கும் பயணிகள் பலரும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பயணம் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்-பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் மற்றும் இருபாலைப் பகுதிகளில் பாலங்கள் திருத்தியமைப்பதற்காக அருகில் வெட்டபட்டுள்ள குழிகளில் வீதி விளக்குகள் இன்மையால் இரவு வேளையில் நடந்து செல்லும் பாதசாரிகளும், சைக்கிள் பயணிகளும் அவ்வப்போது இடறிவிழுந்த சம்பவங்கள் பல அண்மை நாட்களாக நடந்தேறி வருகின்றன.

எனவே பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பிரதான வீதிகளுக்கு வீதி விளக்குகளைப் பொருத்தி பொதுமக்கள் பயணத்திற்கு உதவி வழங்குமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். (03)

# முறையற்ற ஆடை அணிந்து வந்த எம்.பி சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் நாடாளுமன்ற விதிகளுக்கு முரணாக ஆடை அணிந்து வந்ததன் காரணமாக சபையிலிருந்து வெளியேறுமாறு கோரப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் நேற்றுமுன்தினம் கடும் சிவப்பு நிற ஷேர்ட் அணிந்து வந்தார். அதையடுத்து பிரதி படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ அவரை சபையிலிருந்து வெளியேறுமாறு கோரினார்.

"நான் அவரை வெளியேறுமாறும் முறையான ஆடையணிந்து மீண்டும் வருமாறும் கோரினேன். அவர் அதன்படி செயற்பட்டார்" என நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி - சல்வார் அணிந்து வந்ததன் காரணமாக சபையிலிருந்து வெளியேறுமாறு கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்தம் இரண்டு லட்சம் சிறுவர்கள் பாடசாலைகளிலிருந்து விலகுகின்றனர்

(கொழும்பு)

வருடாந்தம் சுமார் 2 லட்சம் சிறுவர்கள் பாடசாலைகளிலிருந்து இடையில் விலகுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர்பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

10-14 வயதுக்குட்பட்டவர்களே அதிகமாக பாடசாலைகளிலிருந்து விலகுவதாகவும் ஆனால், சிலவேளை 5 வயதானோரும் இவ்வாறு விலகுவதாகவும் அவர் கூறினார். பெற்றோர்கள் சிலருக்கு போதிய கல்வியறிவின்மை காரணமாக தமது பிள்ளைகள் 5 ஆம் வகுப்பு வரை கற்றால் போதுமானது எனக் கருதுவதே இந்த விலகலுக்கு காரணமென அவர் தெரிவித்தார்.


பெண்களால் மாத்திரம் தனியாக நடத்தப்படும் ஒற்றை பெற்றோரைக் கொண்ட குடும்பங்களிலும் தாய்மார்கள் மத்தியக்கிழக்கு போன்ற நாடுகளில் வேலை செய்யும் குடும்பங்களில் இப்பிரச்சினை அதிகம் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

"இதனால் பல சமூகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பாடசாலைகளிலிருந்து விலகுபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடிந்தால் சிறுவர் தொழிலார்கள், சிறுவர்களைக் கடத்துதல் மற்றும ஏனைய வகையான சிறுவர் துஷ்பிரயோகங்களையும் கட்டுப்படுத்த முடியும்" என அபேகுணவர்தன கூறினார்.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நன்னடத்தை மற்றும் சிறுவர்பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு என்பன இணைந்து நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போர்க்குற்ற விசாரணை நடத்துமாறு பிளேக்கிடம் வன்னி மக்கள் கோரவில்லை

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்



வன்னிக்கான பயணத்தை அடுத்து இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துப் பேசியிருந்தார் றொபேட் ஓ பிளேக்.

(கொழும்பு)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்ற அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக்கைச் சந்தித்த எந்தவொரு தமிழரும் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்துமாறு கோரவில்லை என்று இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.**

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் பற்றி இருதரப்பும் தகவல் வெளியிடவில்லை.

ஆனால் இந்த சந்திப்பின் போது, கோத்தபாய ராஜபக்ஷவிடம் குறுக்கு விசாரணை நடத்துவது போன்று பிளேக் கேள்விகளை எழுப்பியுள்ளதாகவும், ஆட்சிமாற்றத்துக்கு அமெரிக்கா முனைகிறதா என்று கோத்தபாய ராஜபக்ஷ அவரிடம் விசாரித்ததாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் பிளேக்குடனான சந்திப்பில் பேசப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார் கோத்தபாய ராஜபக்ஷ.

வன்னிக்குச் சென்றிருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலரிடம், போரினால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள மக்கள், போதிய தொழில்வாய்ப்பின்றி இருப்பதையே அடிப்படையான பிரச்சினையாக எடுத்துக் கூறியுள்ளன்ர் என்று கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிளேக்குடனான சந்திப்பு ஊக்கமளிப்பதாக இருந்தது என்று குறிப்பிட்ட அவர், போருக்குப் பிந்திய நிலைமைகளில் அமெரிக்காவும், இலங்கையும் இணைந்து பணியாற்ற முடியும் என்று நம்புவதாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கக் குழுவினர் இலங்கை விமானப்படையின் உலங்குவானூர்தியிலேயே வன்னிக்குச் சென்றனர் அவர்களை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு படைத்தளபதிகள் வரவேற்று அங்குள்ள நிலைமைகள் குறித்து விளக்கமளித்தனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபடவில்லை என்ற உறுதிமொழியை பிளேக் என்னிடம் தந்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு முறையில் இலங்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாடு என்று பிளேக் என்னிடம் கூறினார்.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் வடக்கு, கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்கள் உள்ளிட்ட சில விவகாரங்கள் குறித்து என்னிடம் பிளேக் விசாரித்தார்.

ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அதற்கு விளக்கமளித்ததாகவும்,

ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் இருந்தால் என்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் பிளேக்கிடம் கூறியுள்ளேன்.

போரில் இறந்தவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க அரசாங்கம் பின்னடிப்பது குறித்தும் பிளேக் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு,போர் நடந்ததால் பல ஆண்டுகளாக குடித்தொகை மதிப்பீடுகள் நடத்தப்படவில்லை. தற்போது அந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது போரில் மரணமானவர்களின் விபரங்களைத் திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவருக்கு விளக்கிக் கூறியுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை ஐந்துவருடமாக வரையறுக்கத் திட்டம்

(கொழும்பு)

நீதிமன்ற ஆணைக்குழுவின் செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை வரையறுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டத் திருத்தங்கள் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணைக்குழுவின் செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் இந்த சட்டத்திருத்தம் அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் 65 வயது வரையில் பிரதம நீதியரசர் பதவியை வகிக்க முடியும், எனினும் புதிய சட்டத் திருத்தங்களின் அடிப்படையில் ஐந்து ஆண்டுகள் பதவியை பூர்த்தி செய்தல் அல்லது 65 வயதை அடைதல் ஆகிய இரண்டு காரணிகளின் அடிப்படையில் பதவிக்காலம் நிர்ணயிக்கப்படவுள்ளது.

# சகோதரர்களான இலங்கை மக்களுக்கு பிரிந்து செல்வதற்கான உரிமைகிடையாது

## என்கிறார் அமைச்சர் டலஸ்

(கொழும்பு)

கணவன்,மனைவி இருவரும் தமக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் நீதிமன்றம் மூலம் விவாகரத்துப் பெற்று பிரிந்து செல்லலாம் ஆனால் சகோதரர்கள் அவ்வாறு பிரிந்து செல்ல முடியாது. இலங்கையில் உள்ளவர்கள் சகோதரர்கள் அவர்களுக்குப் பிரிந்து போகும் உரிமை கிடையாதென அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பின்லேடனை ஒரு தீவிரவாதி என்று அழைக்கும் உலகம், மிகஆபத்தான புலிகளின் தலைவரை ஒரு போராளி என்கிறது.

பிரபாகரன், இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி, ஜனாதிபதி பிறேமதாச ஆகியோரைக் கொன்றதுடன் 600இற்கும் அதிகமான தற்கொலைத் தாக்குதல்களுக்கும் உத்தரவிட்டவர்.

பிரபாகரன் விடயத்தில் மேற்குலகம் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

பல மில்லியன் கணக்கான மக்களைக் கொண்ட இரண்டு நாடுகளினது தலைவர்களின் மரணத்துக்குக் காரணமான தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் பிரபாகரன்.

அல்கொய்டா எந்தவொரு நாட்டின் தலைவரையும் கொல்லவில்லை. ஆனால் அவர்கள் தீவிரவாதிகளாகக் காட்டப்படுகின்றனர்.

புலிகளை தருஸ்மன் குழுவின் அறிக்கை எப்படி ஒழுக்கம் நிறைந்த அமைப்பாகக் குறிப்பிட முடியும்? இது இந்த அறிக்கையின் நம்பகத்தன்மையையும், நேர்மையையும் கேள்வி எழுப்ப வைக்கிறது.

புலிகள் விமானப்பிரிவு ஒன்றையும், ஒரு நாட்டுக்கான நிர்வாகத்தையும், தற்கொலைப்படை ஒன்றையும் வைத்துக் கொண்டு அல்கெய்டாவுக்கு முன்னரே உலகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தவர்கள்.

தமக்கு அச்சுறுத்தல் இல்லாத தீவிரவாதிகளை மேற்குலகம் சுதந்திரப் போராளிகள் என்று காட்டுகிறது. அவர்களை புரட்சியாளர்கள் என்றும், போராளிகள் என்றும், கெரில்லாக்கள் என்றும் காட்டுகிறது.

இதுபற்றிய வேறுபாட்டை றொபேட் ஓ பிளேக்கிடம் அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ளது.

பிளேக்கிடம் வன்னியில் உள்ள மக்கள் போர்க்குற்றம் பற்றியெல்லாம் முறைப்பாடு செய்யவில்லை. இறப்புச் சான்றிதழ்கள் கிடைக்கவில்லை என்றும், தமது பிரியமானவர்களின் இருப்பிடம் பற்றியும் தான் அவர்கள் கூறியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்,



கணவனும் மனைவியுமே விவாகரத்து செய்து பிரிந்து போகும் உரிமை உள்ள போது, ஏன் ஒரு நாடு பிரிந்து போகக் கூடாது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கணவன்,மனைவி பிரிந்து போகலாம்- ஆனால் சகோதரர்கள் பிரிந்து போக முடியாது.

இலங்கையில் உள்ளவர்கள் சகோதரர்கள்- அவர்களுக்குப் பிரிந்து போகும் உரிமை கிடையாது என்றும் டலஸ அழகப்பெரும மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கிடைத்த வருமானம் தொடர்பாக தடயவியல் தணிக்கை விசாரணை




(ஜெகனாஸ்பேர்க்)

ஐ.பி.எல். போட்டி மூலம் கிடைத்த வருமானம் குறித்து வெளிப்படையாக தடயவியல் தணிக்கை விசாரணை நடத்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்த நியோகாவை மீண்டும் தலைவராக நியமிக்கவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து விசாரணை நடத்த அதன் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு இந்தியாவில் தேர்தல் நடைபெற்றது. அதனால் பாதுகாப்புக் காரணத்துக்காக ஐபிஎல் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்குக் கிடைத்த வருமானம் தொடர்பாக அதன் தலைவர் நியோகோ மற்றும் தலைமைச் செயலக அதிகாரி மஜோலா ஆகியோரிடையே பிரச்சினை ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் மஜோலாவை வெளிபபடையாக விமர்சித்தார் நியோகா. மேலும் இதுதொடர்பாக வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று நியோகா தெரிவித்தார். ஆனால் சிஎஸ்ஏ துறை நீதியான விசாரணை நடத்தியது. பெப்ரவரியில் நியோகா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து, அவரை தலைவர் பதவியிலிருந்து நீக்கியது. இதையடுத்து நீதிமன்றத்துக்குச் சென்றார் நியோகா.

இதை விசாரித்த நீதிமன்றம், நியோகாவைப் பதவியிலிருந்து விலக்கியது சட்டவிரோதமானது. அவரைப் அப்பதவியில் மீண்டும் நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானவுடன் அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக அறிவித்த கிரிக்கெட் சபை பின்னர் அதிலிருந்து பின் வாங்கியது.

இப்போது நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப் போவதில்லை என்றும், வெளிப்படையான தடயவியல் தணிக்கை விசாரணை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## அன்ரூ போத்தா ஓய்வு



அயர்லாந்து அணியின் சகல துறை வீரர் அன்ரூ போத்தா சர்வதேச ஒரு நாள போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.


34 வயதான போத்தா 2001 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். போத்தா தென்னாபிரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் 2007ஆம் ஆண்டு இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 8 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டை வீழ்த்தியிருந்தார்.

போத்தா ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியில் மோர்கனுடன் இணைந்து 360 ஓட்டங்களை மூன்றாவது விக்கெட்டுக்காக பெற்றார்.

இவர் ஒருநாள் போட்டியில் 3606 ஓட்டங்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நாளை வருகிறது தீர்ப்பு



(கொழும்பு

பொதுநலவாய விளையாட்டுக்களில் ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் இலங்கை குத்துச் சண்டை வீரர் மஞ்சு வன்னியராச்சி மீதான தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

பொதுநலவாய விளையாட்டுக்கள் தொடர்பான நீதிமன்றத்தில் நாளை இந்தத் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

நாளை மஞ்சு வன்னியாராச்சி கோலாலம்பூரில் உள்ள பொதுநலவாய விளையாட்டு சம்மேளன நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மஞ்சு வன்னியாராச்சியின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு இரண்டு வருடகாலம் விளையாட்டுத் தடை விதிக்கப்படும். அத்துடன் அவருடைய பதக்கமும் பறிக்கப்படும்.

# பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பம்



**பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்குமிடை யிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.**

**இதேவேளை பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கயானாவின பிறவுடன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய பாகிஸ்தான் அணி ராம்போல், டரன் சமி ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது, 41.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 55, உமர் அக்மல் 24, ஆட்டமிழக்காது மொகமட் சல்மான் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ராம்போல் நான்கு, அணித்தலைவர் டரன் சமி மூன்று, ஜே. பிராவோ இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.**

**பதிலுக்கு 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, 23.3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எல். எம். பி. சிமென்ஸ் 77, எட்வேர்ட்ஸ் 40 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சிமென்ஸூம், தொடர் நாயகனாக மொகமட் ஹபீஸூம் தெரிவு செய்யப்பட்டனர்.**

**முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரை வென்ற பாகிஸ்தான் அணிக்கு, இறுதி இரண்டு போட்டிகளிலும் ஏற்பட்ட தோல்வி பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என விளையாட்டு விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

## பலமாக அமையும்



(புதுடில்லி)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பல அனுபவங்களைப் பெற்ற கங்குலியின் வருகை எமது அணிக்குப் பலமாக அமையும் என புனே அணி வீரர் ரொபின் உத்தப்பா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சௌரவ் கங்குலியின் வருகையால் வீரர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 11 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ள இவர், புனே அணியின் வெற்றிக்கு நிச்சயம் கைகொடுபபார் என நம்புகிறேன் என்றார்.



**இங்கிலாந்து அணியின் ஒரு நாள் போட்டிக்கான தலைவரான அலிஸ்டர் குக், டெஸ்ட் அணித் தலைவரான ஸ்ரோஸ், ரீ-20 அணித் தலைவரான ஸ்ருவோர்ட் புரோட் ஈ பயிற்சியாளர் நியமனம் நீடிக்கப்பட்ட அன்டி பிளவர் ஆகியோர் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியவேளை....**

# சென் மைக்கல், பாடும்மீன் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்தில் உள்ள கழகங்களுக்கு இடையே உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்திவருகின்றது.

இதன்படி கடந்த புதன்கிழமை பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், உரும்பிராய் சென்.மைக்கல் அணியை எதிர்த்து வடமராட்சி ரெட்றேஞ்சர்ஸ் அணி மோதிய போட்டியில் 1:1 என்ற கோல் கணக்கில் சமனிலையில் நிறைவுபெற்றதால் தண்ட உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் உரும்பிராய் சென்.மைக்கல் அணி 4-3 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

மேலும் நேற்றுமுன்தினம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மற்றொரு, குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து வலிகாமம் யங்கென்றீஸ் அணி மோதியது. இதில் 2:2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமனிலையில் நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து தண்ட உதை மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்பட்மது. இதில் பாடும்மீன் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (21)




# இன்று ஆரம்பமாகிறது கரப்பந்தாட்டத் தொடர்

(யாழ்ப்பாணம்)

தினமுரசு நிறுவனத்தின் ஊடக அனுசரணையுடன் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கழக அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் (செற் அப்) இன்று முதல் ஆரம்பமாகின்றது.

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகும் இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நாளை மறுதினம் வரை நடைபெற ஏற்பாடகியுள்ளது.

விலகல் முறையில் நடைபெறவுள்ள இத்தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிக் கரப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இறுதிப் போட்டி ஐந்து செற்களைக் கொண்டதாக அமையவுள்ள அதேவேளை, மற்றைய அனைத்துப் போட்டிகளும் மூன்று செற்களைக் கொண்டதாக அமையும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மீண்டும் விசாரணைக்கு அழைப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்ண மீண்டும் ரகசிய காவல் துறையினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணி வீரர்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டு வருவதாக அவர் கூறிய கருத்துத் தொடர்பில் விசாரணை நடத்தும் வகையிலேயே அவர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, அவர் இது தொடர்பில் ஒருமுறை தமது வாக்குமூலத்தை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**உலகக் கிண்ணத்தை இந்திய அணி வென்றதை முன்னிட்டு தமிழக வீரர் அஸ்வினுக்கு ஒரு கோடி ரூபாவையும், ஏனைய வீரர்களுக்கு மூன்று கோடி ரூபாவையும் தமிழக முதல்வர் கருணாநிதி வழங்குவதனைக் காணலாம்.**

# பின்லேடன் கொல்லப்பட்டமை குறித்து முழு விபரங்களையும் வெளியிட வேண்டும்

## அமெரிக்காவை கேட்கிறார் நவநீதம்பிள்ளை




(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவின் இரகசிய நடவடிக்கையில் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது தொடர்பான முழு விபரங்களையும் அமெரிக்கா வெளியிட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையின் ஆணையர் நவநீதம்பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒசாமா பின்லேடனுக்கு எதிரான நடவடிக்கை சட்டப்படியான ஒன்றா என சரிபார்க்க இந்தத் தகவல்கள் தேவைப் படுவதாக அவர் கூறியுள்ளார்.

அல்கொய்தாவின் நிறுவுனரான பின்லேடன் மிகக் கொடூரமான பயங்கரவாதச் செயல்களைப் புரிந்ததாக தானே ஒத்துக்கொண்டிருந்தாலும் - பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேநேரம், ஆயுதமற்ற ஒருவரைக் கொன்றது தனக்கு சங்கடமான உணர்வுகளை ஏற்படுத்துவதாக அங்கிலிகன் திருச்சபையின் தலைவரான ரோவான் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒசாமா பின்லேடன் தன் நாட்டிலிருந்ததை தனது உளவு நிறுவனங்களால் கண்டுபிடிக்க முடியாமல் போனதாகக் கூறப்படுவது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக பாகிஸ்தான் சிரேஷ்ட அதிகாரிகள் தெரி விக்கின்றனர். ஞாயிற்றுக் கிழமை இரவில் ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல் நடத்தி அவரைக் கொன்ற தாக குதல் நடவடிக்கை குறித்து தமக்கு எவ்வித விவரமும் முன்னதாகத் தெரி விக்கப்படவில்லை என்று பாகிஸதானிய இராணுவத் தளபதிகள் கூறியுள்ளனர்.

ஒசாமா பின்லேடனின் மூன்று மனைவிகளை தற்போது தாம் தடுத்து வைத்திருப்பதாகக் கூறியுள்ளதுடன் அதில் ஒருவர் ஜேமன் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் அவர் ஒசாமா பின்லேடனுடன்தான் அந்த வீட்டில் ஓர் அறையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக வாழ்ந்து வந்ததாக விசாரணையின் போது தெரிவித்ததாகவும் கூறியுள்ளனர். இந்த வீட்டில் மொத்தமாக 13 குழந்தைகள் இருந்தனர்.



அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒபாமா 2001 செப்டம்பர் 11 இல் அல்கொய்தா தாக்குதலுக்கு உள்ளான இரட்டை கோபுரம் நினைவிடம் கிரவுண்ட் ஜீரோவிற்குச் சென்று, அங்கு மலர் வளையம் வைத்து, தாக்குதலில் பலியான 3000 பேருக்கும் அஞ்சலி செலுத்தினார். பின்னர் பலியானவர்களின் உறவினர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் அப்பகுதியில் தீயணைப்புப் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர்களையும் ஒபாமா சந்தித்துப் பேசினார்.

## மீண்டும் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கடலில் சுனாமிப் பேரலைகள் உருவாகி ஜப்பானின் நில பரப்புக்குள் புகுந்தது. இதில் கடுமையான சேதம் ஏற்பட்டது. ஆயிரக் கணக்கானோர் பலியானார்கள்.

இந்தப் பேரழிவிலிருந்து ஜப்பான் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வருகிறது. இந்த சக்திவாய்ந்த நில நடுக்கத்தைத் தொடர்ந்து பல நாட்களாக மீண்டும் சிறிய அளவில் நில நடுக்கம் ஏற்பட்டு மக்களின் நிம்மதியை குலைத்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை மீண்டும் ஜப்பானில் நில நடுக்கம் ஏற்பட்டது. அப்போது கட்டிடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் பீதி அடைந்தனர். என்றாலும் சேதம் எதுவும் இல்லை. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1. ஆக இருந்ததாக பதிவாகியுள்ளது.

## ஒசாமா பின்லேடன் மீதான தாக்குதலுக்கு ஹெலிகளின் வடிவமும் மாற்றியமைப்பு



(இஸ்லாமாபாத்)

அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனைத் தாக்க அமெரிக்கா தனது அதிநவீன எப் -117 ஸ்டெல்த் தொழில்நுட்பத்தை உலங்கு வானூர்திகளில் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இத் தாக்குதல் நடவடிக்கைக்கு ராடர்களிலிருந்து தப்புவதற்காக விஷேட வடிவமும், சிறப்பு முலாமும் பூசப்பட்ட Blackhawk ரகத்தைச் சேர்ந்த உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இத் தாக்குதல்கள் நடவடிக்கைக்காக உலங்குவானூர்திகளின் வடிவத்தையே அமெரிக்கப் படைத் தரப்பினர் முற்றாக மாற்றி அமைத்துள்ளனர். இந்த மாற்றம் செய்யப்பட்ட உலங்கு வானூர்திகளை அமெரிக்கா இதுவரை வெளியுலகுக்குக் காட்டியதில்லை.

ராடர்களிலிருந்து தப்புவதற்காக இந்த உலங்குவானூர்திகளின் முனைகளை மேலும் கூர்மையாக்கியுள்ள அமெரிககா, அதன் சத்தத்தைக் குறைக்க இறக்கைகளை மேலும் சிறிதாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் நடவடிக்கை முடிந்த பின்னர் தொழில்நுட்பக் கோளாறால் அமெரிக்கப் படையினரால் குண்டுவீசித் தகர்க்கப்படட உலங்குவானூர்தி முற்றாகச் சிதைவடையாத நிலையில் மீட்கப்பட்ட அந்த உலங்கு வானூர்தியை அடிப்படையாக வைத்துக் கொண்டு சர்வதேச ஊடகங்கள் இத் தகவலை வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு நான்கு Blackhawk ரகத்தைச் சேர்ந்த உலங்கு வானூர்திகளே பயன்படுத்தப்பட்டதாக அமெரிக்கா முன்னர் குறிப்பிட்டிருந்த போதிலும், பாகிஸ்தானியப் படையினரால் மீட்கப்பட்ட உலங்குவானூர்தி சுமார் எப் - 117 ரகத்தைச் சேர்ந்த உலஙகு வானூர்தி போன்றே காணப்பட்டது.

அதேவேளை, இந்த உலங்கு வானூர்திகள் அபோடாபாத்துக்கு வந்து தங்கள் தலைக்கு மேலே பறக்கும் வரை தங்களுக்குச் சத்தமே கேட்கவில்லை என்று ஒசாமா பின்லேடனின் வீட்டுக்கு அருகல் வசிப்போர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பின்லேடன் மீதான தாக்குதலில் விசேட நாயும் ஈடுபடுத்தப்பட்டது



(இஸ்லாமாபாத்)

அமெரிக்க கடற்படையின் விஷேட அதிரடிப்பிரிவான மெரைய்ன்சீல்ஸ் பிரிவினர் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் உள்ள பின்லேடனின் மறைவிடத்தின் மீது வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தி அவரைக் கொன்றமை குறித்து அமெரிக்கா பெருமிதத்தில் உள்ளது.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட படை வீரர்களுள் ஒருவர் நியுயோர்க் டைம்ஸ் மற்றும் பிரிட்டனின் சன் பத்திரிகை ஆகியனவற்றின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இது மனிதன் அல்ல இராணுவத்தில் பயன்படுத்தப்படும் நாய். இந்த நாய் படை வீரர் ஒருவருடன் சேர்த்துப் பிணைக்கப்பட்டுள்ளது.

அந்தத் தாக்குதல் வீரர் ஹெலிகொப்டரில் இருந்து இறங்கும் போது அதுவும் கூடவே வருகின்றது. இந்த நாய் பற்றி எந்தக் குறிப்பையும் பென்டகன் இதுவரை வெளியிடவில்லை.

யார் இந்த நாய்? என்பது தான் இப்போது எழுந்துள்ள கேள்வி. இதுதான் அமெரிக்காவின் துணிச்சல் மிக்க நாய் என்று அமெரிக்காவின் த டைம்ஸ் பத்திரிகை வர்ணித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தில் 2700 நாய்களைக் கொண்ட ஒரு தனிப்பிரிவு உள்ளது. அதில் அநேகமானவை ஜெர்மன் ஸ்பர்ட் மற்றும் பெல்ஜிய மலிநோயிஸ் இனங்களைச் சேர்ந்தவை.

எனவே பின்லேடன் தாக்குதலில் பங்கேற்ற இந்த நாயும் இந்த இனங்களுள் ஒன்றைச் சேர்ந்ததாகவே இருக்க வேண்டும் என்று டைம்ஸ் தெரிவித்துள்ளது.

பின்லேடன் மீதான தாக்குதல் பற்றிய முழு விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. வெள்ளை மாளிகையும், பென்டகனும் இந்த விடயத்தில் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றன.

ஆனாலும் இந்த நாய் குறித்த தகவல்கள் எப்படியோ கசிந்துவிட்டன. இந்த மாதிரியான தாக்குதல்களின் போது தேடுதல் நடவடிக்கைக்கு நாய்களின் பங்கு கட்டாயம் தேவைப்படும்.

எனவே நிச்சயம் ஒரு படை வீரர் நாயுடன் வந்திருக்கக் கூடும் என்றும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன

## மாஸ்டர் என அழைக்கப்பட்ட பின்லேடன்

(இஸ்லாமாபாத்)

பின்லேடன் கொல்லப் பட்டதையடுத்து அவர் வாழ்ந்த வீட்டுச் சூழலில் வசிப்பவர்களும் அந்த வீட்டோடு சம்பந்தப்பட்ட பலரும் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த வீட்டைக் கட்டியதாகக் கூறப்படும் 38 வயதான குல் மொஹமட் என்பவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். வீட்டை கட்டியவர்கள் அதன் சொந்தக்காரரை மாஸ்டர் என்று தான் குறிப்பிடுவர்.

அந்த மாஸ்டர் யார் என்பது பற்றி எதுவும் எனக்குத் தெரியாது. நான் அவரைக் கண்டது கூட இல்லை.அந்த வடு யாருக்காகக் கட்டப்படுகின்றது, அதில் யார் வாழப் போகிறார்கள் என்பது பற்றிக் கூட எதுவும் எனக்குத் தெரியாது.

வேலை நடைபெற்ற நாட்களில் எப்போதாவது ஒருவர் அல்லது இருவர் அங்கு வந்து வேலைகளைப் பார்வையிடுவர். பணத்தைப் பற்றி எப்போதுமே அவர்கள் கவலைப் பட்டதில்லை.

இவ்வளவு உயரமான மதில்கள் ஏன் என்று நான் அவர்களைக் கேட்டேன். அது உனக்குத் தேவையில்லாத விடயம் என்று அவர்கள் பதில் அளித்தனர் என்று அந்த நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த வீடு 38000 சதுர அடி பரப்பு கொண்டதாகும். 2006 ஜனவரி ஆறாம் திகதி முதலே பின்லேடன் இந்த வீட்டில் வசிகக ஆரம்பித்திருக்கலாம் என்று பாகிஸ்தான் உளவுத் துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது ஐந்து மனைவிகள் உள்ள பின்லேடன் தனது இரணடு மனைவிகளுடன் இந்த வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார். அவரின் மூன்று பிள்ளைகளும் இந்த வீட்டில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இது தவிர மேலும் ஏழு பெண்களும் 20 பிள்ளைகளும் கூட இந்த வீட்டில் இருந்ததாக நம்பப்படுகின்றது.

இந்த வீட்டில் இருந்த ஒரு கடிகாரம் அதிகாலை 2.20 மணியுடன் செயல் இழந்துள்ளது. இந்தத் தாக்குதல் அதிகாலை வேளையில் நடந்துளளது என்பதை இது ஊர்ஜிதம் செய்கினறது.

# ஸ்பெக்ட்ரம் வழக்கில் நிரபராதியென நிரூபிக்க உள்ளாராம் கனிமொழி



(புதுடில்லி)

ரூ.1.76 லட்சம் கோடி 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் நிரபராதி என்று நிரூபிப்பேன் என்று கனிமொழி எம்.பி. கூறியுள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு தொடர்பாக விசாரித்து வரும் சி.பி.ஐ. சார்பாக உயர்நீதிமன்றில் இரண்டு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. முதல் குற்றப்பத்திரிகையில் முதல்வர் கருணாநிதி மகள் கனிமொழி சேர்க்கப்படவில்லை. இரண்டாவது முறையாக தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகையில் கனிமொழி எம்.பியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அதுவும் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் கூட்டுச் சதி செய்ததாக அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் டில்லி சென்றுள்ள கனிமொழி நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜரானார். அதற்கு முன்னர் தொலைக்காட்சி நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் ஆஜராகும்படி சி.பி.ஐ. உயர்நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருப்பது குறித்து கேட்டனர். அதற்குப்பதில் அளித்த கனிமொழி 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் நான் விடுவிக்கப்படுவதோடு நிரபராதி என்பதை நிரூபிப்பேன். எனக்கும் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறுவதை சட்டரீதியாக எதிர்த்துப் போராடுவேன்.

குற்றப்பத்திரிகையில் நான் கூட்டுச் சதிகாரி என்று கூறப்பட்டிருக்கிறது. இது மிக மிகப் பெரிய குற்றச்சாட்டாகும் ஆனால் நான எந்தவித ஊழலும் செய்யவில்லை. நான் மிகவும் தூய்மையானவள். அதனால் அந்தக் குற்றச்சாட்டில் இருந்து நான் விடுவிக்கப் படுவேன். நான் நிரபராதி என்பதையும் நிரூபித்துக்காட்டுவேன் என்றும் கனிமொழி மேலும் கூறினார்.




## உறவு பாதிக்காது

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணை காரணமாக காங்கிரஸ்-தி.மு.க. இடையேயான உறவு பாதிக்கப்படாது என்று ஜெயந்தி நடராஜன் எம்.பி. கூறினார்.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் எம்பி. டில்லியில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர், உயர் நீதிமன்றின் கண்காணிப்பில், ஸ்பெக்ட்ரம் வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இந்த விடயத்தில் எத்தகைய நிர்ப்பந்தங்களுககும் காங்கிரஸ் பணியாது.

நல்ல சமயங்கள் மட்டுமின்றி, மோசமான சந்தர்ப்பங்களிலும் தி.மு.க.வுடனான எங்களுடைய உறவு தொடர்ந்து வருகிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் விசாரணை காரணமாக இரு கட்சிகளுக்கும் இடையேயான உறவில் பாதிப்பு ஏற்படும் என்று நான் கருதவில்லை.

காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி நல்லிணக்கத்துடன் வெற்றிகரமான கூட்டணியாக இருந்து வருகிறது என்று கூறினார்.

## 50 ஆண்டுகளில் இந்திய சனத்தொகை 170 கோடியாக உயருமெனத் தகவல்

(நியூயோர்க்)



உலக மக்கள் தொகை பற்றிய ஆய்வு ஒன்றை ஐ.நா.சபை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இந்தியாவின் மக்கள் தொகை அடுத்த 50 ஆண்டுகளில், அதாவது 2060 ஆம் ஆண்டு 170 கோடியைத் தாண்டும். 2030 ஆம் ஆண்டு, இந்திய சனத்தொகை உலக நாடுகளிலேயே அதிகமாக இருக்கும். பின்னர் மக்கள் தொகை விகிதம் படிப்படியாகக் குறைய வாய்ப்பு உள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2060ஆம் ஆண்டு, இந்திய மக்கள் தொகை 170 கோடியாக இருக்கும். 2025ஆம் ஆண்டு சீனாவின் மக்கள் தொகை 140 கோடியைத்தொடும். இந்த நூற்றாண்டின் மத்தியில் உலக சனத்தொகை 930 கோடியாக இருக்கும்.

2100ஆம் ஆண்டு இது 1000 கோடியைத் தாண்டும். இந்த வருடம் அக்டோபர் 31ஆம் திகதி பிறக்கும் முதல் குழந்தை, உலக மக்கள் தொகையின் 700ஆவது கோடி ஆளாக கணக்கிடப்படுவார். இவ்வாறு அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஸ்பெக்ட்ரம் விவகார சதிக்கு ராஜாதான் முழுமுதற் காரணம்

### பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானி வாதாட்டம்

(புதுடில்லி)

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் ராஜாதான் முழுச்சதிக்கும் காரணம் என்றும், இதில் கனிமொழிக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் இந்தியாவின் பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானி கனிமொழி மீதான நேற்றைய விசாரணையில் நீதிமன்றில் தெரிவித்தார். கனிமொழிக்குப் பிணைகேட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையில் அவர் வாதாடுகையில் பேசியதாவது:

இந்த விவகாரத்தில் கனிமொழிக்கு எவ்வித தொடர்பும் கிடையாது. அவர் எந்தவொரு ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை. இவரால் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இதனால் இவர் மீது எவ்வித குற்றமும் இல்லை. இவர் கலைஞர் தொலைக்காட்சியில் ஒரு பங்குதாரர் மட்டுமே. நாள்தோறும் என்ன நடக்கும் என்ற விடயம் இவரது கவனத்திற்குவராது. ராஜாதான் முழுச்சதிக்கும் முக்கிய காரணம். மேலும் கனிமொழி ஒரு எம்.பி. சட்டத்தை மதித்து நடப்பவர், ஒரு பெண்ணும்கூட. இதனால இவருக்கு பிணை வழங்கி நீதி காக்க வேண்டும். இவ்வாறு ராம்ஜெத்மலானி வாதாடினார்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர்: ராசலிங்கம் தேனுயா
முகவரி: தாளையடி வடக்கு,
தாளையடி.

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## இலங்கையுடன், இந்திய அணி கிரிக்கெட் விளையாடக் கூடாது

### மக்கள் கண்காணிப்பகம் கோரிக்கை



(மதுரை)

தமிழக மீனவர்களைத் தொடர்ந்து கொலை செய்து வருவதைக் கண்டிக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் அணியுடன் இந்திய கிரிக்கெட் அணி விளையாடத் தடை விதிக்க வேண்டும் என்று மக்கள் கண்காணிப்பகம் கோரிக்கை வைத்துள்ளது.

மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மீனவர் உரிமை மீறலுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கை குழுவின் கூட்டம் மதுரையில் நடந்தது. கூட்டத்தில மத்திய அரசுக்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு,

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் விக்டஸ், அந்தோனிராஜ், ஜோனபோல், மாரிமுத்து ஆகியோர்களை இலங்கைக் கடற்படையினர் கொலை செய்துள்ளனர். இந்தச் சம்பவத்தை பணியில் உள்ள நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நடததவேண்டும்.

## ராசா, கல்மாடியின் சிறைவாழ்வு அவலம்

(புதுடில்லி)

ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கிக் கைது செய்யப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, சுரேஷ்கல்மாடி ஆகியோர் டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அரண்மனை போன்ற வீடுகள், ஆடம்பர விருந்துகள் என அத்தனை வசதிகளையும் அனுபவித்து பழக்கப்பட்ட இவர்களின் வாழ்க்கை முறை திகார் சிறையில் அடியோடு மாறி விட்டது.

இரவில் ஒரு போர்வையின் மீது மட்டுமே படுத்து உறங்குகிறார்கள். சிறைக்குள் இந்த வி.வி.ஐ.பி.க்களின் ஒவ்வொரு பொழுதும் அதிகாலை 5.30 மணிக்குத் தொடங்குகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காக உடற்பயிற்சிக் கூடம், நூலகத்துக்கு இவர்களை அனுப்புவதில்லை.

காலை 6.30 மணிக்கு ஒரு கப் ரீயும், 2 ரொட்டிகளும் கிடைக்கும். காலை 9 மணிக்கெல்லாம் குளித்துத் தயாராகிவிட வேண்டும் இரண்டே இரண்டு சப்பாத்திகள் கிடைக்கும். கொஞ்சம் சோறு, பருப்பு, காய்கறி பொரியல் கிடைக்கும். அதை மதிய உணவாக காலை 9 மணிக்கே வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

நண்பகலில் பார்வையாளர்களை சந்திக்க அனுமதிக்கப்படுவார்கள். பின்னர் மாலை 3 மணிவரை சிறை அறைகளுக்குள் அடைக்கப்பட்டிருப்பார்கள். இந்த நேரத்தில் அவர்கள் படிக்கலாம், தொலைக்காட்சி பார்க்கலாம். மாலை 3 மணிக்கு 2 பிஸ்கட்டும் ஒரு கப் ரீயும் வழங்கப்படும். மாலை 6 மணிக்கெல்லாம் இரவு உணவை வாங்கி வைத்துக்கொளள வேண்டும். அதன் பிறகு மீண்டும் சிறைக்குள் அடைக்கப்படுவார்கள். இந்தச் சிறை வாழ்க்கை வி.வி. ஐ.பி.க்களுக்கு மறக்க முடியாத அனுபவமாக இருக்கும்.

## உயர்தர அனுமதிக்காக சட்டவிரோத பண அறவீடு

### ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தர கல்விக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது நடைமுறைச் சட்டத்துக்கு முரணாக மாணவர்களிடமிருந்து ஒருசில பாடசாலை அதி காரிகள் பணத்தினை அறவிடுவதாக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு உயர்தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது வசதிகள் சேவைக் கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் மற்றும் அங்கத்துவ கட்டணம் தவிர்ந்த எந்தவொரு கட்டணமும் அறவிட முடியாது என ஆசிரியர் சங்க பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

2008-17ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில் கட்டண அறவீடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சுற்று நிருப விதிமுறைகளை மீறிச் செயற் படுபவர்கள் மீது கல்வி அமைச்சு சட்ட நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர தெரிவித்துள்ளார்.

## பட்டப்பின்படிப்பை மேற்கொள்வோருக்கு முழு நேரம் கல்வி கற்பது குறித்து ஆலோசனை

(கொழும்பு)

பட்டப் பின்படிப்பைத் தொடர்வோருக்குப் பல்கலைக் கழகங்களில் முழுநேரம் கல்வி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையின் பல்கலைக் கழகங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வோரை இலக்கு வைத்தே அமைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே பட்டப் பின் படிப்பைத் தொடர்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்களுக்கான கல்வி வசதிகள் அநேகமாக வெளிவாரி கற்கை நெறிகள் ஊடாகவே வழங்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பட்டப்பின் படிப்பிற்காக வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் மாத்திரமே இடம்பெறுவதாகவும் பேராசிரியர் காமினி சமரநாயக்க கூறியுள்ளார்.

இதன் மூலம் பல்கலைக் கழக்கத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதோடு அதன் தரத்தைப் பேணுவதிலும் சிரமம் ஏற்படுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேற்கத்தேய நாடுகளைப் போன்று பட்டப்படிப்பினைத் தொடர்வோருக்கு மட்டுமல்லாமல், பட்டப்பின் படிப்பினைத் தொடர்வோருக்கு முழுநேரம் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் காமினி சமரநாயக்க மேலும் தெரிவித்தார்.

## அளவெட்டி அருணோதயக் கல்லூரி IAB பாடசாலையாகத் தரமுயர்வு



(அளவெட்டி)

அளவெட்டி அருணோதயக் கல்லூரி இந்த வருடத்திலிருந்து IAB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எனவே, கல்லூரியில் இவ் வருடத்திலிருந்து உயர்தரப் பிரிவில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய கல்வியாண்டிற்கான கணித, விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் அதிபரிடம், விண்ணப்பங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து ஒப்படைக்கலாம். இந்தப் பிரிவுகளை நடத்துவதற்கான வளங்களும் தற்போது பாடசாலைக்குக் கிடைத்தவண்ணமுள்ளது.

அத்தடன், பாடசாலை தரம் உயர்வதற்குப் பங்களிப்புச் செய்த, மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வியமைச்சின் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

# சமூகத்தில் முதியோர் ஒதுக்கப்படுவதனை தடுத்து நிறுத்த சகலரும் முன்வரவேண்டும்

### சமூக சேவை உத்தியோகத்தர் சண்முகநாதன்

(யாழ்ப்பாணம்)

**சமூகத்தில் முதியவர்கள் ஏனையோரால் ஒதுக்கப்படுவதனை இல்லாதொழிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டுமென சமூக சேவை உத்தியோகத்தர் சண்முகநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.**

யாழ்ப்பாணம் வண் வடமேற்கு ஜே/99 கிராம சேவகர் பிரிவில் அமைக்கப்பட்ட மூத்தோர் அவைக் கூட்டம் நேற்று முன்தினம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள யாழ். கல்வி நிலையத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதியோர் அவையின் தலைவர் ஆ. வரதராஜன் தலைமையில் காலை 10.00 மணி முதல் முற்பகல் 11.30 மணி வரை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் திருமதி பாலகுமாரி ஸ்பெல்மன், சமூக சேவை உத்தியோகத்தர் சண்முகநாதன் உட்பட முதியோர் அவையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய திருமதி பாலகுமாரி - முதியோர் அவையில் இணைந்துள்ள அனைவரும் தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும். அத்துடன் அங்கத்தவர்களின் தேவைகள் மற்றும் எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதுடன், முதியோரின் உரிமைகள் குறித்தும் நன்கு அறிந்திருக்க வேண்டும். முதியோர் சங்கத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் அவசியமானதெனவும் தெரிவித்தார்.

சமூக சேவை உத்தியோகத்தர் சண்முகநாதன் தனதுரையில், தற்போது இலங்கையின் பதினாறு வீதமாகக் காணப்படும் முதியோரின் எண்ணிக்கை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் இருபது வீதமாக அதிகரிக்கவுள்ளது. ஆத்மீக உளவள மேம்பாட்டை அதிகரிக்கும் நோக்கிலேயே முதியோர் அமைப்புக்களை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இவ்வாறு உருவாகிய இந்த அமைப்புகளை நாம் அனைவரும் இணைந்து பலப்படுத்த வேண்டும். சமூகத்தில் முதியோர் எனப்படுவோர் புறந்தள்ளப்படும் நிலையை இல்லாதொழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## போஷாக்கை அதிகரிக்க ஜப்பான் நிறுவனம் உதவி

(கொழும்பு)

வடமாகாணத்தில் உள்ள பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களின் சுகாதார நலன் கருதி உலக வங்கியின் ஊடாக ஜப்பான் சமூக அபிவிருத்தி நிலையம் நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கமைய இரண்டு தசம் ஏழு மில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருட திட்டத்தின் மூலம் சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் போஷாக்குக் குறைபாடுள்ளவர்களின் போஷாக்கு நிலைமையை முனனேற்ற முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் தாய்மார்களுக்கான சுகாதார துறைசார் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தண்டம் வழங்காமல் கடவுச்சீட்டு

(கொழும்பு)

லிபியாவில் இருந்து நாடு திரும்புபவர்களுக்கு தண்டம் எதுவும் அறவிடாப்படாது கடவுச்சீட்டு வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

லிபியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்து, அங்குள்ள இலங்கையர்கள் நாடு திரும்பி வருகின்றனர்.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் லிபியாவில் உள்ள இலங்கையரை நாட்டுக்கு திருப்பி அழைக்க விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்படுகிறது.

நாடு திரும்புவதற்கு விரும்பும் அதிகமான இலங்கையரின் கடவுச்சீட்டுகள் யுத்த சூழல் காரணமாக காணாமற்போயுள்ளன. எனவே அவர்களுக்குத் தண்டம் அறவிடாது மீள கடவுச் சீட்டு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுவாக காலாவதியாக முன் கடவுச்சீட்டு காணாமல் போனால் 10 ஆயிரம் ரூபா தண்டம் அறிவிடப்படுகிறது. லெபனானில் ஏற்பட்ட யுத்த நிலைமையின் போது நாடு திரும்பிய இலங்கையர்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கமநல சேவை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படாமை குறித்து விசனம்

### ■ குத்தகை விவசாயிகள் பாதிப்பு ■

(கொழும்பு)

கமநல சேவைகள் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படாததால் பிரதேச மட்டத்தில் குத்தகை விவசாயிகள் சிக்கல்களை எதிர்கொள்வதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குத்தகைக் காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

காணி உரிமையாளர்களுக்கும் குத்தகைக் காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வோருக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்படும் போது அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக கமநல சேவைகள் ஆணைக்குழுக்களின் உதவியை நாட வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த ஏழு வருடங்களாக பிரதேச மட்டத்தில் கமநல சேவைகள் ஆணைகக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

கமநல சேவைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் குறித்த ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்படாமை குத்தகைக் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வோரை வெகுவாகப் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாகக் குறித்த விவசாயிகளின் உரிமைகள் மீறப்படுவதாகவும், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காணிகள் இல்லாமல் சிரமத்தை எதிர்நோக்குவ தாகவும் மனித உரிமை ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது






நேற்று முற்பகல் குருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தின் கீழ் இயங்கும் வலைத்தொழிற்சாலையின் முன்பகுதியில் நிறுவனத்தின் தலைவர் எஸ். ஏ. பரந்தாமன் வலை விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைப்பதனையும், வியாபார நடவடிக்கைகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதனைக் காணலாம். (படம் : தமிழ்வாணன்)

# பொன்னான வாய்ப்புக்கள் மண்ணாகிவிட்டன இப்போதுள்ள அரிய வாய்ப்பை பயன்படுத்துவோம்

## இன்றைய யதார்த்தம் பற்றிப் பேசுகிறார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

மக்களாகிய நீங்கள் சரியான அரசியலை தெரிவு செய்யவேண்டும் சரியான அரசியலை தெரிவு செய்வதன் மூலமாகத்தான் இன்று இருக்கின்ற நிலையை மாற்றமுடியும். இந்த நிலையிலிருந்து மீண்டுகொள்ள முடியும்.

இந்த நிலையை உருவாக்கியவர்கள் எங்களது அரசியல் தலைவர்களே கடந்த காலங்களில் எங்களுக்கு எவ்வளவோ நல்ல வாய்ப்புகள் கிடைத்தது. இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு அதனை கெடுத்தது தமிழ் தலைமைகள்தான்.

இவ்வாறு நேற்று சுன்னாகம் வீதி புன்னாலைக்கட்டுவனில் தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் கொள்வனவு விற்பனை நிலையத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தேசவளவிவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.ம.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்பு பிரேமதாசா, சந்திரிகாகுமாரங்கா, ரணில் விக்கிரமசிங்க, மகிந்தராஜபக்ஷ போன்றவர்கள் வழங்கிய சந்தர்ப்பங்களை எமது தமிழ் தலைவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை.

இப்போது எமக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அது ஐ.நாவின் தருஷ்மன் அறிக்கை இந்த கிடைத்த சந்தர்ப்பத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும். இந்த ஒரு தருஷ்மன் அறிக்கை தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி ஒன்று வழங்கியிருந்தேன். அதனை தவறாகப் புரிந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னியுத்தத்தில் யாரும் கொல்லப்படவில்லை என்று நான் தெரிவித்ததாகக் கூறிவருகின்றனர்.

இதில் எந்த உண்மையும் இல்லை.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக்கை நான் சந்திக்க முயற்சித்ததாகவும் அவர் மறுத்துவிட்டதாகவும் இன்று மேலும் ஒரு செய்திவெளிவந்துள்ளது.

நான் அவரை சந்திக்க நினைக்கவும் இல்லை யாழ்ப்பாணத்திற்கும் வந்துவிட்டேன்.

நாங்கள் தான் எங்கள் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டும் கடந்த காலத்தில் பலவெளிநாடுகள் தலையிட்டன. ஆனால் பிரச்சினையைதீர்க்க முடியவில்லை இந்த பிரச்சினைக்கு எங்களால் தீர்வு காணமுடியும் என நம்புகிறேன். நீங்கள் எந்தளவு உங்கள் ஆதரவான பங்களிப்பை எனக்கு வழங்குகிறீர்களோ அந்தளவுக்கு விரைவாக நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். இதனை மக்கள் சரியாக விளங்கிக்கொண்டு ஆதரவு வழங்க முன்வரவேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடந்த 1977ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரால் 18 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள், 2004இல் 22 பேர் பராளுமன்றம் சென்றனர் அவர்கள் என்ன செய்தார்கள், எனவே சிந்தித்து உங்கள் ஆதரவை வழங்கினால் எவ்வளவோ விடயங்களை எம்மால் சாதிக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

## தொண்டு நிறுவன செயற்பாடு மீளாய்வுக்குழுக் கூட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சியில் பன்னாட்டு தொண்டு நிறுவனங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முந்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பன்னாட்டு தொண்டு நிறுவனங்களினால் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னடுக்கப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் அவற்றினுடைய முன்னேற்றம் பற்றியும் நிறுவன அதிகாரிகளிடம் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற சர்வதேச தொண்டுநிறுவனத்தினர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (110)

### யாழ். நகரில்...

வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காலாவதியான நிலையில் $1^1/_2$ லீற்றர் அளவுடைய 35 மென்பானப் போத்தல்கள், 5 கிலோ பழுதடைந்த பழவகைகள், உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 13 லீற்றர் தேங்காய் எண்ணெய், 2 கிலோ சோஸ் மற்றும் பிஸ்கட், இனிப்பு வகைகள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும் மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினரால் குறிப்பிட்ட பகுதிகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும், வர்த்தகர்கள் மற்றும் உணவு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தமது நிலையங்களில் காலாவதியான, பழுதடைந்த பொருட்களை வைத்திருக்கவேண்டாம் எனவும் நுகர்வோர் இவற்றை வாங்கும்போது அப்பொருட்களின் காலாவதித் திகதியையும் மற்றும் அவை பழுதடைந்துள்ளதா என அவதானித்து வாங்குமாறும், இவ்வாறு இல்லாத வர்த்தக நிலையங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பிரதம பொதுச்சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார்.

### யாழ். நெல்சிப்..

பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர்

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்களிடம் இதற்கான கடிதங்களை வைபவ ரீதியாகக் கையளித்தனர்.

இவ்வாறு நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தைச்சோந்த ஒரு உள்ளூராட்சிச்சபைதவிர்ந்த 13 உள்ளூராட்சி சபைகளுக்கு நெல்சிப் திட்டத்தின் கீழான ஆரம்ப வேலைகளுக்கான இக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது வடமாகாண அபிவிருத்தியுடன் தொடர்புடையவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருபவர்களுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் வடக்குமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களுக்கும் இந்நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எப்.யோண்சன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜியலட்சுமி ரமேஸ் ஆகியோரும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட உள்ளூராட்சித்திணைக்கள அதிகாரிகள், பணியாளர்கள், வடமாகாண சபை அதிகாரிகள் மற்றும் திணைக்களத்தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (பா)

## அலைக்கற்றை மோசடி வழக்கு கனிமொழி நீதிமன்றில் ஆஜர்

### தடுப்புக்காவல் உத்தரவு எதுவுமில்லை

இரண்டாம் தலைமுறை செல்லிடத் தொலைபேசி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு தொடர்பில் திமுக நாடாளுமன்ற உறுப்பினரும் கலைஞர் தொலைக்காட்சியின் பங்குதாரர்களில் ஒருவருமான கனிமொழி நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார்.

கனிமொழியை காவலில் வைக்க உத்தரவிடக் கூடாது என்று அவரது சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி வாதிட்டார்.

டி.பி. ரியாலிடி நிறுவனம் கலைஞர் தொலைக்காட்சிக்கு 200 கோடி ரூபாய் கொடுத்ததாகவும், அலைக்கற்றை ஒதுக்கீட்டில் பெற்ற சலுகைக்காக அந்தத் தொகை லஞ்சமாகக் கொடுக்கப்பட்டதாகவும் புகார் கூறப்படுகிறது.

ஆனால், கனிமொழியைப் பொறுத்தவரை, அதில் 20 வீதம் பங்குகளை வைத்திருக்கிறாரே தவிர, அவர் அதில் இயக்குநராக இல்லை என்றும், அந்தத் தொகையை தொலைக்காட்சிக்குப் பெறுவதில் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் ராம்ஜெத்மலானி வாதிட்டார்.

இயக்குநர்கள் கூட்டம் எதிலும் அவர் கலந்து கொண்டதில்லை என்றும் ஜெத்மலானி சுட்டிக்காட்டினார்.

கனிமொழியுடன் கலைஞர் தொலைக்காட்சியின் மேலாண்மை இயக்குநர் 'ரத்குமாரும் வெள்ளியன்று சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜரானார். அவரது சார்பில் மூத்த வழக்கறிஞர் அ்.ப்டாப் அகமது ஆஜரானார்.

அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது குற்றப்பத்திரிகையில் கனிமொழி, 'ரத்குமார் தவிர, சினியூக் நிறுவனத்தின் கரிம் மொரானி மற்றும் ஏற்கெனவே கைதாகி சிறையில் உள்ள ஆஸி்.ப் பால்வா மற்றும் ராஜீவ் அகர்வால் ஆகியோர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

அவர்கள் அனைவரும் வெள்ளியன்று நீதிமன்றத்தில் ஆரஜாக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

உடல்நலக்குறைவு காரணமாக, கரிம் மொரானி ஆஜராகவில்லை.

அதேநேரத்தில், ராஜீவ் அகர்வால் மற்றும் ஆஸி்.ப் ப்ால்வா ஆகியோர் சார்பில் நடைபெற்ற விவாதம் முடிவடையவில்லை என்பதால் சனிக்கிழமையன்று விசாரணை தொடரவுள்ளது.

அந்த வாதம் முடிந்தபிறகு, சிபிஐ எனப்படும் மத்தியப் புலனாய்வுத்துறை வழக்கறிஞர் தங்கள் நிலைப்பாட்டை எடுத்துரைப்பார். அப்போதுதான், கனிமொழி உள்ளிட்டோரை காவலில் வைக்க வேண்டும் என சிபிஐ வலியுறுத்துமா என்பது தெரியவரும்.

இதுவரை, கனிமொழி சார்பில் ஜாமீன் மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

### ஒசாமாவின் மரணம்..

"பின்லேடனின் மரணம் "ஒரு சாபமாக அமெரிக்கர்களையும் அவர்களின் முகவர்களையும் அவர்களின் நாட்டுக்குள்ளேயும் வெளியிலும் பின்தொடர்ந்து துரத்தும். இன்ஸா அல்லாஹ் அவர்களின் சந்தோசம் விரைவில் துக்கமாக மாறும். அவர்களின் இரத்தம் அவர்களின் கண்ணீருடன் கலக்கப்படும். பலஸ்தீனத்திலுள்ள எமது மக்கள், பாதுகாப்பை அனுபவிக்கும் வரை அமெரிக்கர்களும் அதை உணரப்போவதில்லை" எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்
சபை, யாழ்ப்பாணம்,



## அவுஸ்திரேலியாவுக்கு புதிய தூதுவர் நியமனம்



(கொழும்பு)

அட்மிரல் திசர சமரசிங்க அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சு குறித்த நியமனத்தை உறுதி செய்துள்ளது. திசர சமரசிங்க இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூட்டானில் ரணில்



(கொழும்பு)

பூட்டானுக்கு உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டின் வெளிவிவகார மற்றும் பொருளாதார ,விவகாரங்களுக்கான அமைச்சர் காண்டு வங்சூவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன், பூட்டான் அரசரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

# யாழ்.குடாநாட்டிலும் பணிப்புறக்கணிப்பு போராட்டம்

## உள்ளூராட்சி மன்றங்களில் நேற்று நடந்தது




வவுனியாவில்...

(யாழ்ப்பாணம்)

வவுனியா நகரசபை ஊழியர்களுக்கு ஆதரவாக யாழ்.மாவட்டத்தில் பல உள்ளூராட்சி சபைகளும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

கடந்த வாரம் வவுனியா நகரசபையின் செயலாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரால் கடுமையாகத் திட்டித் தீர்த்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேசசபைகள், நகரசபைகளின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், நேற்றுக் காலை 8.30 முதல் மதியம் 12.30 மணி வரை காரியாலயங்கள் மற்றும் பொது நூலகங்களைப் பூட்டி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலக ஊழியர்கள் நேற்று நண்பகல் 12 மணி வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளில் ஒன்றான நல்லூர் பிரதேசசபையில்



யாழ்ப்பாணத்தில்...

உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் நேற்றைய தினம் நான்கு மணிநேரப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தீவகப் பகுதியிலுள்ள ஊர்காவற்றுறை பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் நேற்றைய தினம் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (11,26,27,100)

# ஐ.நா.வுக்கு எதிராக நடவடிக்கை இல்லை

## அரசாங்கம் அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. சில முகவர் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பைப் பயன்படுத்தி சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முனைப்புக் காட்டி வருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் ஆழமாக ஆய்வு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். எனினும், ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு ராஜதந்திர ரீதியிலான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பின்லேடன் கொல்லப்பட்டதன் பின்னர், இலங்கைக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் வலுவிழக்கக் கூடுமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை; இராணுவத் தளபதி நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐ.நா நிபுணர்குழுவின் போர்க்குற்ற அறிக்கையை நிராகரிப்பதாக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வெலிகந்தையில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் 2 ஆயிரம் பாதுகாப்புப்படையினர் ஒன்று கூடியிருந்த நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.

நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக பதிலளிப்பதற்கு குழுவொன்று இராணுவத்தினரால் நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிபுணர்குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள அனைத்துவிடயங்களையும் வாசித்ததாக ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும், இறுதிக்கட்ட போரின்போது வன்னியில் சமர் நடக்கும்போது, தான் களத்தில் இருந்ததாகவும், அங்கு என்ன நடந்தது என்பது குறித்து தனக்குத் தெரியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில குழுக்களினால் வழங்கப்பட்ட தகவல்களை வைத்து உருவாக்கப்பட்ட அறிக்கையே தருஸ்மன் அறிக்கையாகும். இதில், உள்ள தகவல்கள் ஆதாரமற்றவை.

ஐ.நா வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், இராணுவத்தினது, ஜனாதிபதியினது மற்றும் பாதுகாப்புச் செயலாளரினது பெயருக்கு களங்கம் கற்



பிப்பதற்காகும் என்று இராணுவத்தளபதி தெரிவித்தார்.

நாட்டிற்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் நற்பெயர் ஏற்படுத்த இராணுவம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தொடரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு ஆழ்கடற் பகுதியில் இந்திய மீனவர்கள் நேற்றுக்காலை 250க்கும் மேற்பட்ட அதிவேக விசைப்படகுகள் மூலம் ஊடறுத்து உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்ததாக நெடுந்தீவு கடற்தொழிலாளர்களினால் நெடுந்தீவுக்கு பொறுப்பாக இருக்கும் கடற்படையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று சுமார் 200 முதல் 250 மேற்பட்ட இந்திய அதிவேக விசைப்படகுகளின் உதவியுடன், இந்திய மீனவர்கள் பலர் நெடுந்தீவுக் கடற்பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், தாங்கள் தொழில் செய்யமுடியாதவாறு கரை திரும்பியுள்ளதாக நெடுந்தீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களது அத்துமீறிய ஊடுருவல் காரணமாக தங்களது கடற்தொழில் உபகரணங்களுடன் தாங்கள் கரை திரும்பியுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருமாதமாக இந்திய மீனவர்களது கடல் நடமாட்டம் இல்லாதிருந்த வேளையில், தற்போது நேற்று அதிகரித்திருப்பது கவலை தரும் விடயம் என நெடுந்தீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கச்சதீவு ஒப்பந்தம் வேண்டாம்; சென்னை மேல்நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

1974ஆம் ஆண்டு இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையில் கையெழுத்திடப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கு இந்திய மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை எல்லையில் கடற்படை மற்றும் இந்திய விமானப் படையினர் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். கடலில் மீன் பிடிக்க செல்லும் இந்திய மீனவர்களுடன் கரையோர காவல் படையினரும் செல்ல வேண்டும். இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டமைக்கு நஷ்டஈடு பெறுவதற்காக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண்டும் எனவும் அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

கடலில் பலரின் உயிர்கள் இழக்கப்பட்ட போதிலும், இந்திய மத்திய, மாநில அரசுகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும் ஆனால், உலகக் கிண்ணத் தொடரின் 37 போட்டிகளில், 27 போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு 6.21 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு தமிழக அரசு 3 கோடி ரூபா வழங்கியுள்ளது. தமிழக வீரர் ஆர். அஸ்வினுக்கு மேலதிகமாக ஒரு கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. அவர் ஒரு போட்டியில்கூட விளையாடவில்லை. மறுபுறம் கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் 3 இலட்சம் ரூபாவே வழங்கப்பட்டுள்ளது எனவும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. அறிக்கைக்கு...

தற்போது இந்த அறிக்கை வெளியானதால், இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கும் இராஜதந்திர அழுத்தங்களைச் சமாளிப்பது எப்படி என்பது குறித்து இருநாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளும் இணைந்து மந்திராலோசனை நடாத்தவுள்ளனர். இதற்காக இன்னும் சிலதினங்களில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் புதுடில்லிக்குச் செல்லவுள்ளனர். அங்கு பல மட்டங்களில் கலந்தாலோசனைகள் நடாத்தப்படவுள்ளன.

இக்கலந்தாலோசனைகளின் இறுதியில் ஐ.நா. அறிக்கைக்கு நிகராக வலுவான நிலையில் நின்று தாக்குப்பிடிக்கக் கூடியதும், ராஜதந்திர நியமங்களுக்குட்பட்ட வகையிலான பொறிமுறை ஒன்று வரைபு செய்யப்படவிருக்கிறது. இது இரு நாடுகளினதும் ஒருங்கிணைந்த அணுகுமுறையாக அமையும் என்றும், அதன் பின்னரே ஐ.நா.வின் அறிக்கைக்கு முறையான பதில் உத்தியோக பூர்வமாக வழங்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

## மனிதாபிமானத்தின்...

நோர்வே நாட்டு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் தெரிவித்துள்ளார். அதேநேரம், தான் புலிகளிடம் பேசியபோது, நான் உங்களை 06 மாதத்திற்கு முதலே சரணடையச் சொன்னேன். நீங்கள நான் சொன்ன எதனையும் செவிமடுக்கவில்லை. இப்போது என்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை புலிகளுக்கு திட்டவட்டமாக தெரிவித்திருந்தாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளும் போர்க்குற்றம் புரிந்துள்ளார்கள். ஆனால், அவர்களில் அனைவரும் இறந்துவிட்டார்கள். ஆனால், தற்போது இலங்கைத் தரப்பு மீது குற்றச்சாட்டுகள் முன்னகர்ந்துள்ளது. எனவே, இலங்கை அரசு இதனை விசாரிக்கவேண்டும். இல்லையேல் சர்வதேச சமூகம் வேறு வழிகளை நோக்கிச் சிந்திக்கும். நோர்வே இந்த இடத்தில் எதனையும் செய்துவிடமுடியாது. காரணம் நோர்வே ஒருபோதும் மத்திய பங்காளராக இலங்கை விடயத்தில் கலந்துகொண்டதில்லை. புலிகளின் தலைவர், நடேசன், புலிதேவன் ஆகியோர் இறுதி நாள் என்னுடன் தொடர்புகொண்டு சரணடையப் போவதாகவும், எமது கருத்தையும் கேட்டார்கள். சம்பவ தினம் நான் பலருடன் இது தொடர்பாக கலந்துரையாடினேன். இலங்கை செஞ்சிலுவை சங்கமும் இந்த முயற்சியில் ஈடுபட்டது ஆனால், அடுத்த நாள் அவர்கள் கொல்லப்பட்டதாக அறிந்தேன். எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்பது எமக்கு தெரியாது எனவும், தான் மேற்கொண்டு இங்கு கருத்துக்கூறுவது இலங்கைப் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் வரும் என்பதால் தவிர்க்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.